பக்கங்கள்:-26

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | சித்திரை 22 | ஞாயிற்றுக்கிழமை | 04.05.2025 | அதிர்வு 273


## தேர்தல் பிரச்சாரப் போர் நேற்று நள்ளிரவுடன் ஓய்வு

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குரிய பிரச்சாரப் போர் நேற்று நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தது. நேற்று இறுதிக்கட்ட சூறாவளிப் பிரச்சாரத்தில் கட்சிகள் பலவும் ஈடுபட்டன.

தேர்தலுக்கான மௌன 06

## தமிழரசுடன் இணைய விரும்பும்



# கஜேந்திரகுமாரை அரவணைக்க நாங்கள் தயார்!

## யாழ். கிட்டு பூங்கா இறுதிப் பரப்புரை கூட்டத்தில் சுமந்திரன் இப்படி தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

“எம்மோடு கைகோர்க்கத் தயார் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நெல்லியடியில் வைத்து சொல்லியிருக் கின்றார். நல்ல விடயம். இரு கரம் நீட்டி அவரை அரவணைக்க நாம் தயாராக இருக்கின்றோம்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 06




நேற்று நள்ளிரவுடன் – அதாவது இன்று அதி காலையுடன் – தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஓய்வுக்கு வந்தன. ஆயினும் நேற்று நள்ளிரவு வரை இடம்பெற்ற பிரச்சார நடவடிக்கைகள், பரப்புரைக் கூட்டங்கள், செய்தியாளர் மாநாடுகள் பற்றிய செய்திகளை மட்டும் இன்று ஊடகங்கள் பிரசுரிக்க முடியும் என்று ஒரு கட்டுப்பாடு தளர்வு உள்ளது. அந்த அடிப்படையில் இந்தத் தகவலை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

தேர்தல் சமயங்களில் தேர்தல் பிரசாரத்துக் காக சுவரொட்டி ஒட்டுவது குற்றமாயினும், அப் படி ஒட்டப்படும் சுவரொட்டிகள் பற்றிய செய்தி களை வெளியிடுவது தவிர்க்க முடியாதது.

அண்மையில் கூட யாழ் நகரமெங்கும் ‘மூன்று கோமாளிகளும் ஒரு பைத்தியமும் போதும், இனிமேல் வேண்டாம்’ என்ற சாரப்பட்ட வாசக்ங்களோடு அமைந்த சுவரொட்டிகள் ஒட்டப் பட்டு, ஒரு கலக்குக் கலக்கியமை தெரிந்ததே. அது குறித்து ஏலவே ஒரு தடவை 06









# கிளிநொச்சியின் 3 சபைகளும் தமிழரசு வசமாகும்!

## பெருந்திரளான மக்கள் பங்கேற்ற இறுதிப் பரப்புரையில் சிறீதரன் எம்.பி. உறுதி

நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் கிளிநொச்சி மாவட்டத்தின் நாற்பது வட்டாரங்களையும் வென்று கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று சபைகளிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சியே ஆட்சியமைக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் நேற்று கிளிநொச்சி பசுமைப்பூங்கா வளாகத்தில் பெருந்திரளான மக்கள் பங்கேற்போடு நடைபெற்ற இறுதிப் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“அடக்குமுறைக்கு எதிராகப் போராடுகின்ற எங்களின் அடையாளங்களைப் பாதுகாக்க வேண்டுமாயின் உள்ளூர் அதிகாரங்களைத் தீர்மானிக்கின்ற சக்திகளாக நாங்களே இருக்க வேண்டும். ஆட்சிப்பீடம் ஏறி ஆறு மாதங்கள் கடந்தும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்த எந்தச் சமிக்ஞைகளும் அரச தரப்பிலிருந்து எழவேயில்லை என்றபோதும் ஈழத்தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு குறித்து இந்த அரசோடு பேசுவதற்கும் நாம் தயாராகவே உள்ளோம்.” – என்றார்.

கிளிநொச்சி நகர வர்த்தகர் சங்கத் தலைவர் இளையதம்பி விஜயசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் செல்வராணி சோமசேகரம்பிள்ளை, வடக்கு மாகாண மேனாள் கல்வி அமைச்சர் தம்பிராஜா குருகுலராஜா, மேனாள் தவிசாளர்களான அருணாசலம் வேழமாலிகிதன், சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன், சுப்பிரமணியம் சுரேன், கட்சியின் பூநகரி பிரதேச அமைப்பாளர் தனபாலன் குவேந்திரன், வேட்பாளர்களான ஜெலானி தர்மராசா, ஷாலினி சாருகன் ஆகியோர் உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## கட்டுரை வெளிவராது மூன்று நாள்கள்

உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரங்கள் நேற்று நள்ளிரவு 12 மணியுடன் முடிவுக்கு வந்துவிட்ட காரணத்தினால் தேர்தலைப் பாதிக்கும் செய்திகளை - கட்டுரைகளை - விவரணங்களை - வாக்களிப்பு முடியும் வரை பிரசுரிக்காமல் தவிர்க்க வேண்டும் என்ற கட்டுப்பாடு வந்திருக்கின்ற காரணத்தினால், “திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றில் அரசியல் சந்தர்ப்பவாதமா?“ என்ற தலைப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி செல்லத்துரை ரவீந்திரன் எழுதும் கட்டுரைத் தொடர் இன்றும், நாளையும், வாக்களிப்புத் தினமான மறுதினமும் பிரசுரமாகாது என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும்.

- ஆசிரியர் -



# மக்களின் காணிகளைப் பிடுங்கும் செயற்பாடு வடக்கு – தெற்கு உறவை மேலும் பாதிக்கும்!

## வர்த்தமானியைக் கைவாங்கக் கோரி ஜனாதிபதிக்கு சுமந்திரன் கடிதம்

“வர்த்தமானி அறிவித்தல் மூலம் வடக்கு மக்களின் காணிகளைப் பிடுங்கும் நடவடிக்கை ஏற்கனவே பாதிக்கப் பட்டிருக்கின்ற வடக்கு – தெற்கு உறவை மேலும் பாதிக்கச் செய்யும்.”

– இவ்வாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கடிதம் மூலம் தெரிவித்திருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

மேற்படி விடயம் தொடர்பான வர்த்தமானியை மீளக் கை வாங்குமாறு கோரி

“காணிகள் நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் 28.03.2025 திகதியிட்டு வெளியிடப்பட்டுள்ள வர்த்த மானி பிரசுரம்“ என்ற தலைப்பில் அமைந்த இந்தக் கடிதத் தில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு:–

“மேற்சொன்ன வர்த்தமானி இல: 2,420 சம்பந்தமாக தங்களது கவனத்தை ஈர்க்கின்றேன்.

இந்த அறிவித்தலின் பிரகாரம் தங்களது உரித்து சார்ந்த கோரிக்கைகளை உரிமையாளர்களும் மற்றவர்களும் வர்த்த மானியின் திகதியிலிருந்து 3 மாத காலங்களுக்குள் முற்படுத்த வேண்டும். இல்லாவிடில் அந்தக் காணிகள் அக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 5(1) இன் கீழ் அரச காணி என்று பிரகடனப்படுத்தப்படும்.

இந்தக் கட்டளைச் சட்டம் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்களால் எமது மக்கள் நூற்றாண்டுகளாக பாவித்து வந்த, ஆனால் தெளிவான உரித்தாவணங்கள் இல்லாத காணிகளை பறிப்பதற்காக உருவாக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். இச் சட்டம் எப்போதோ அகற்றப்பட்டிருக்க வேண்டும்.

எது, எப்படியாக இருப்பினும் வடக்கு, கிழக்கு மக்கள் கடந்த 50 ஆண்டு காலத்தில் பல தடவைகள் இடம்பெயர்ந்து இன்னமும் முழுமையாக தங்கள் நிலங்களில் மீள் குடியேற் றப்படாத நிலையில் இருக்கின்றார்கள். கீழே கூறப்படும் காரணங்களுக்காகவும் வேறும் காரணங்களுக்காகவும் இந்தச் சட்டம் தற்போதைய சூழ்நிலையில் உபயோகப்படுத் தப்படக் கூடாது.

1. பல தொடர்ச்சியான இடம்பெயர்வுகள் சாதாரண வாழ்வை குழப்பியுள்ளதோடு, இன்னமும் அது திருத்தியமைக்கப்பட வில்லை.

2. கட்டாய இடப்பெயர்வுகளாலும் இந்தப் பிரதேசங்களை அழித்தொழித்த சுனாமி பேரலையினாலும் மக்கள் தமது உறுதிகளையும் மற்றைய ஆவணங்களையும் இழந்துள் ளனர்.

3. இந்தக் காணிகளின் உரித்தாளர்கள் பலருக்கு பல வருடங்களுக்கு முன்னரே மரித்த முன் உரித்தாளர்க ளிடம் இருந்து முறையாக உரிமை மாற்றம் செய்யப்பட வில்லை.

4. பல இலட்சக்கணக்கான மக்கள் போர்ச் சூழலில் இருந்து தப்பி வெளி நாடுகளில் அகதிகளாக முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவின் தமிழ் நாட்டில் ஐ. நா. அகதிகளுக்கான உயர்ந்த ஸ்தானி கரின் அனுமதியோடு ஒரு இலட்சமளவிலானவர்கள் வாழ்கின் றார்கள்.

இந்தச் சூழ்நிலையில் இந்த வர்த்தமானியில் கேட்கப் பட்வாறு தமது கோரிக்கைகளை முன்வைப்பதென்பது இந்த மக்களால் செய்ய முடியாத ஒன்றாகும்.

இந்த நடவடிக்கை தொடருமாக இருந்தால் வடக்கு, கிழக்கு மாகாணத்தின் தமிழ் மக்கள், அந்த மாகாணத்தின் மக்கள் என்ற ரீதியில் சட்டத்தின் உரித்தோடு தமது நிலங்களை மீள வும் பெற்றுக்கொண்டு அவற்றைத் தாமாக ஆட்சி செய்யும் உரிமையை இழந்து விடுவார்கள். இது வடக்கு, கிழக்கு மக்க ளின் உரிமைகளை மதிக்காத செயலாகவும், ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கின்ற வடக்கு – தெற்கு உறவை மேலும் பாதிக்கப் பண்ணுவதாகவும் அமையும். உண்மையாகவே நாட்டைக் கட்டியெழுப்ப விரும்புகின்ற எந்த அரசும் இதைத் தவிர்க்க வேண்டும்.

ஆகையால் காலதாமதமின்றி இந்த வர்த்தமானியை மீளக் கை வாங்குமாறு அவசரமாகக் கோருகின்றோம்.” – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும்

## விக்னேஸ்வரன் வலியுறுத்து



"நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும். அரச சார்பு கட்சிகளுக்கு வாக்களிக்கக்கூடாது."

– இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பான கேள்வி – பதிலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவருடனான கேள்விகளும், பதில்களும் வருமாறு:–

**01. கேள்வி :–** நீங்கள் அரசியலில் இருந்து ஓய்வு பெற்று விட்டீர்களா?

**பதில்:–** இல்லை. எனது கட்சியின் செயலாளர் நாயகமாகத் தொடர்ந்து பணிபுரிகின்றேன். ஆனால், இளைஞர் – யுவதிகளுக்கு அதிகாரங்களைப் பிரித்துக் கொடுத்து அவர்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றேன். அண்மையில் நீதிமன்றங்கள் சென்றோம். அரசியல் ரீதியாக நடப்பனவற்றை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றேன்.

**02. கேள்வி :–** எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன?

**பதில்:–** நம்பத்தகுந்த தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் சேர்ந்து ஒரு சில முக்கிய உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றுவது பற்றியும் நேசக் கட்சிகளுக்கு ஆதரவு வழங்குவது பற்றியும் நாம் சிந்தித்து நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டும். அரச சார்பு கட்சிகளுக்கு வாக்களிக்கக்கூடாது.

**03. கேள்வி :–** இம்முறை அரச கட்சி (தேசிய மக்கள் சக்தி) சென்ற முறை போன்று வெற்றி பெறுமா?

**பதில்:–** எம் மக்கள் தமிழ்த் தேசியத்தின் மீதும் தேர்தல் மீதும் கரிசனை காட்டினால் அரச கட்சி தோல்வியுறும். ஆனால், தபால் வாக்குகள் அளித்த தொகையினரின் அளவுப் பிரமாணம் மனவருத்தத்தை அளிக்கின்றது. அரச பணியாளர்கள் பலர் வாக்களிக்கவில்லை என்று தெரிகின்றது. எமது மக்கள் தமது விரக்தியை தேர்தலில் காட்டினால் அது அரச கட்சிக்கு சார்பாக மாறிவிடும். சென்றமுறை ஒரு இலட்சத்திற்குக் குறைந்த தொகையினரே அரச கட்சிக்கு வாக்களித்தனர். தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வாக்களித்தவர்களின் தொகை ஒரு இலட்சத்தைத் தாண்டியிருந்தது. ஆனால், தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே இருந்த பிளவுகள் அரச கட்சிக்குச் சார்பாக அமைந்தது. இம்முறை எமது மக்கள் விரக்தியின் நிமித்தம் வாக்களிக்கச் செல்லாது விட்டால் மீண்டும் அது அரச கட்சிக்கே சார்பாக அமையும். அரச கட்சி இம்முறை வெற்றி பெறக்கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பு.

**04. கேள்வி :–** அரச கட்சியை ஏன் நீங்கள் வெறுக்கின்றீர்கள்?

பதில் :– நாம் வெறுக்கவில்லை. நடப்பவற்றை உன்னிப்பாகக் கவனித்து அரச கட்சிக்கு வாக்களித்தால் எமது தனித்துவம் அழிந்துவிடும் என்ற உண்மையை நாம் உணர்ந்ததால் மக்களுக்கு அதை வலியுறுத்தி வருகின்றோம். ஒருவன் மரங்களின் அழகில் மயங்கி அவற்றைப் பார்த்துக் கொண்டு வெகுதூரம் சென்றுவிட்டான். மிருகங்களின் உறுமல் சத்தங்கள் கேட்டதும் தான் அவன் காட்டிற்குள் நுழைந்ததை உணர்ந்தான். அப்பொழுதுதான் காட்டுக்குள் இருந்து வெளியேறுவது எவ்வளவு சிரமமானது என்பதை அவன் உணர்ந்தான். நாம் அரச கட்சியின் மேல்வாரியான சில நடவடிக்கைகளைக் கண்டு அவர்கள் பக்கம் சார்ந்தோமானால் எதிர்காலத்தில் எதிர்வரும் சங்கடங்களைச் சமாளிக்க முடியாமல் போய்விடும். இதை மக்கள் உணர வேண்டும். தேசிய மக்கள் சக்தியின் அத்திவாரமும் இதயமும் ஜே.வி.பியே என்பதை எம் மக்கள் மறக்கக்கூடாது. வடக்கு – கிழக்கின் இணைப்பை இல்லாதாக்கிய அதே ஜே.வி.பி.தான்.

**05. கேள்வி :–** அப்படி என்ன பாதிப்பான நடவடிக்கைகளில் அரச கட்சி ஈடுபட்டு வருகின்றது?

**பதில் :–** அண்மையில் அரச கட்சி பேச்சாளர் ஒருவர் தமது கட்சியே இனி என்றென்றும் ஆளவிருக்கின்றது, அநுரகுமாரவுக்கு மிஞ்சிய நல்லவர் ஒருவர் இருந்தால் மட்டுமே அவருக்கு வாக்களிக்கலாம், ஆனால், அப்படி எவருமே புலப்படவில்லை என்று கூறினார். இதன் அர்த்தத்தை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். இதுவரை காலமும் நடந்து வந்த ஜனநாயகத் தேர்தல்களை நாம் இனி எவ்வளவு காலத்திற்கு எதிர்பார்க்க முடியுமோ தெரியாது. ஜே.வி.பி. பதவியில் இருந்து இறங்காது. எவர் வந்தாலும் ஒரு கட்சியே ஆளும். அந்தக் கட்சியில் உள்ளவர்களில் நல்லவரை மக்கள் தேர்ந்தெடுக்கலாம் என்பதே ரஷ்யா, சீனா, கியூபா, வடகொரியா போன்ற நாடுகளில் இருக்கும் தேர்தல் முறை. படிப்படியாக அவ்வாறான ஒரு நிலை இங்கும் வர இருக்கின்றது என்பதை மக்கள் உணர வேண்டும். இலஞ்ச, ஊழல்வாதிகளை நீதிமன்றின் முன் நிறுத்த இருக்கின்றார்கள் என்பதை வைத்து வரப்போகும் மற்றைய விடயங்களை சிந்தியாது இருப்பது முட்டாள்தனம். திருடர்களையும் இலஞ்ச, ஊழல்வாதிகளையும் பிடிக்க அரசுக்கு எமது மக்கள் ஆதரவு வழங்குவது அவசியம். ஆனால், அரச கட்சியின் பின்னணி, சிந்தனை, அரசியல் தத்துவம், வரலாறு போன்றவற்றை மக்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு வழங்குவதாகக் கூறிய வாக்குறுதிகளில் எவையெவை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்பதை மக்கள் கவனத்திற்கு எடுக்க வேண்டும். திணைக்களங்கள் மக்கள் காணிகளைச் சூறையாடுவது நின்றுவிட்டதா அல்லது தொடர்கின்றதா என்பது பற்றி எம்மவர் ஆராய வேண்டும். முல்லைத்தீவில் அரச படையினர் தொகை குறைக்கப்பட்டுள்ளதா என்பதை எம்மவர் ஆராய்ந்து விடை காண வேண்டும். அங்கு பொது மக்கள் 2 அல்லது 3 பேருக்கு ஒரு படைவீரன் என்ற முறையிலேயே அரச படை இன்றும் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. மக்களை பௌத்தர்களாக்கும் திட்டம் கைவிடப்பட்டுள்ளதா என்பதை எம்மவர் ஆராய வேண்டும். சிங்களக் குடியேற்றங்கள் நின்றுவிட்டனவா, தொடர்கின்றனவா என்பதை எம் மக்கள் ஆராய வேண்டும். உள்ளூர் இடங்களுக்கு சிங்களப் பெயர்கள் சூட்டும் பழக்கம் தொடர்கின்றதா, கைவிடப்பட்டுள்ளதா என்பது பற்றி ஆராய்ந்து எம்மவர் அறிந்து கொள்ள வேண்டும். திணைக்களங்களுக்கு தனிச் சிங்களத்தில் கடிதங்கள் இன்றும் வருகின்றனவா இல்லையா என்பதை மக்கள் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். முன்னைய தேர்தல்களின் போது அரச கட்சி தமிழ் மக்களுக்கு வழங்குவதாகக் கூறியவை வழங்கப்பட்டுள்ளனவா என்றும் ஆராய்ந்து தீர்ப்பெடுக்க வேண்டும்.

**06. கேள்வி :–** அரச கட்சி இம்முறை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல உள்ளூராட்சி மன்றங்களைக் கையேற்கும் என்றிருக்கின்றார்கள் அரச தரப்பு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள். அது பற்றி உங்கள் கருத்தென்ன?

**பதில் :–** உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அந்தந்த வட்டாரங்களில், பிரதேசங்களில் வசிப்பவர்கள் வாக்களிக்கின்றார்கள். இந்த அரசு அந்தந்தப் பிரதேசங்களில் ஏதேனும் உதவிகளை இதுவரையில் செய்தார்களா என்று பார்த்தால் எதுவுமே செய்ததாகத் தெரியவில்லை. மக்கள் எவ்வாறு அரச கட்சிக்கு வாக்களிப்பார்கள்? அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளார்களா? ஒரு பக்கத்தில் காணிகளை விடுவிப்பதாகக் கூறி வேறொரு பக்கத்தில் அரச திணைக்களங்களை கொண்டு தமிழர்களின் பாரம்பரிய காணிகளைக் கையேற்கும் மர்மம் பற்றி எம் மக்கள் தெரியாமல் தான் இருக்கின்றார்களா? மக்களுக்குத் தெரியும். இதுவரை எமது தமிழ்த் தேசியக் கட்சிகள் விட்ட பிழைகள், அரச கட்சி இந்தக் குறுகிய காலத்தினுள் நடைமுறைப்படுத்தாது விட்ட தேர்தல் வாக்குறுதிகள் பற்றி எல்லாம் அவர்களுக்குத் தெரியும். இம்முறை தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கே மக்கள் வாக்களிப்பார்கள். தேர்தலின் பின்னர் நாம் வடக்கு, கிழக்கில் இணைந்தே நிர்வாகத்தை வழி நடத்துவோம். அரச கட்சிக்கு இனி இங்கு இடமிருக்காது.




# பகிடி வதைக்கு எதிராக கல்வி அமைச்சு நடவடிக்கை

பகிடிவதையை எதிர்நோக்கும் மாணவர் ஒருவர் அது குறித்து அறிவிப்பதற்காக அனைத்து பல்கலைக்கழகங்களிலும் அதிகாரியொருவரை நியமிக்க கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்முறை கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஒவ்வொரு பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையிலும் அவர் நியமிக்கப்படுவார் என பிரதியமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பாக கலந்துரையாடுவதற்காக அனைத்து அரச பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களும் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் பிரதியமைச்சர் கூறினார்.

விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ஹரிணி அமரசூரியவின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடைபெறும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் கல்வி பயிலும் 2ஆம் வருட மாணவனின் மரணம் தொடர்பில் பக்கசார்பற்ற விசாரணையை நடத்துவதற்காக விசாணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்முறை கல்வி பிரதியமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார்.

பொலிஸாரினால் இந்த விடயம் தொடர்பாக விசாரணை நடத்தப்படுவதாகவும் இதற்கு மேலதிகமாக உளநல சுகாதாரப் பிரிவினரும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பில் எடுக்க வேண்டிய அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் எடுக்கவுள்ளதாகவும் பக்கச்சார்பற்ற விசாரணை முன்னெடுக்கப்படுவதால் சமூக ஊடகங்களை பயன்படுத்துவோர் சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் பிரதியமைச்சர் டொக்டர் மதுர செனவிரத்ன வலியுறுத்தினார்.

# கண்ணிவெடி அகற்றும் திட்டத்தின் நன்கொடையாளர் பாராட்டு விழா



வடக்கு, கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்றுவது என்பது பௌதீக ஆபத்துகளை அகற்றுவது மாத்திரமன்றி மக்களின் கண்ணியம், வாழ்வாதாரம் மற்றும் அமைதியான வாழ்க்கை நிலையை மீட்டெடுப்பதற்கான ஒரு தேசிய தேவையாகுமென பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவிக்கிறார்.

நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சினால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்ணிவெடி அகற்றும் திட்டத்தின் நன்கொடையாளர் ஒருங்கிணைப்பு மற்றும் பாராட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய இதனை கூறினார்.

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பணியில் பங்காளிகளாக உள்ள அனைவருக்கும் நன்றி தெரிவித்த அவர் மோதல்களுக்குப் பின்னர் எழுந்த ஒரு தேவையாக இருந்தாலும் கண்ணிவெடி அகற்றல் என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமென்பதுடன் மக்களின் கண்ணியம், வாழ்வாதாரம், அமைதியான எதிர்காலத்திற்கான வாக்குறுதியை மீட்டெடுக்கும் செயற்பாடு எனவும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப அனைவருக்கும் சமமான வாய்ப்புகளை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக பிரதமர் கூறினார்.

வடக்கு, கிழக்கில் சுமார் 23 சதுர கிலோமீற்றர் நிலம் இன்னும் கண்ணிவெடிகள் காரணமாக பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதாக தெரிவித்த பிரதமர் கண்ணிவெடிகள் உள்ள பகுதிகளை பொதுமக்கள் விரைவில் பயன்படுத்தக் கூடியதாக மாற்ற வேண்டிய தேவை குறித்தும் வலியுறுத்தினார்.

2028 ஜூன் முதலாம் திகதிக்கு முன்னர் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கான ஒப்பந்தத்தின் பிரிவு 5 இன் கீழுள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மேலும் கூறினார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இப்பத்தியில் பிரஸ்தாபித்திருந்தேன்.

அந்த வகையில் நேற்று முன்னிரவில் பல இடங்களிலும் ஒட்டப்பட்ட ஒரு சுவரொட்டியின் படத்தை நண்பர் ஒருவர் அனுப்பியிருந்தார். அது நீர்வேலிப் பகுதியிலும் ஒட்டப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்திருந்தார். வேறும் பல இடங்களில் அதைக் காண முடிந்ததாக தகவல் கிடைத்தது என்றார் அவர்.

வாசகர்களின் பார்வைக்காக அந்த




சுவரொட்டியின் படத்தை இணைத்துள்ளேன்.

மகாநாயக்கர் ஒருவருக்கு முன்னால் முழந்தாளில் இருந்தபடி ஜனாதிபதி அநுகுமார திஸநாயக்க ஒரு சுருள் வடிவ ஆவணத்தை அல்லது பொதியை மகாநாயக்கரிடம் கையளிக்கும் படம் அந்த சுவரொட்டியில் இருந்தது. சுவரொட்டியில் படத்தின் கீழே 'பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தலும் வேண்டும் – NPP ஆதரவு அணி' என்று தமிழில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த வாசகம் அரசமைப்பில் இருப்பது. அதை ஜனாதிபதி செய்கின்றார் என்பது போன்ற அர்த்தத்தை தரும் விதத்தில் அந்தச் சுவரொட்டி அமைக்கப்பட்டிருந்தது. போதாக்குறைக்கு அருகில் 'வெற்றி நமதே; ஊர் எமதே' என்று தேசிய மக்கள் சக்தியின் விளம்பரச் சுவரொட்டியும் ஒட்டப்பட்டிருந்தது.

எடுத்த எடுப்பில் அந்தச் சுவரொட்டியை பார்ப்பவர்களுக்கு அது தேசிய மக்கள் சக்தியின் பிரசார சுவரொட்டி போன்ற தோற்றத்தைத் தரும். ஆனால் தமிழில் இத்தகைய படத்தோடு இந்த வாசகத்தை குறிப்பிட்டு – பௌத்தத்தைப் பேணும் நடவடிக்கையை சுட்டிக்காட்டி – தமிழர் பிரதேசத்தில், இப்படி ஒரு சுவரொட்டி தேர்தல் பிரசாரத்திற்காக தேசிய மக்கள் சக்தி ஒட்டுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றே நினைக்கிறேன்.

இப்போது நாட்டில் பின்பற்றப்படும் உண்மை நிலைவரத்தை, தேசிய மக்கள் சக்தியின் ஆதரவு அணி என்ற பெயரில் இப்படி சுவரொட்டி அச்சிட்டு ஒட்டுவதன் மூலம் தமிழ் மக்களுக்கு – குறிப்பாக வடக்கு மக்களுக்கு – ஒரு செய்தியாகச் சொல்லும் உள்நோக்கில் மூன்றாம் தரப்பு ஒன்றினால் இந்த சுவரொட்டி அச்சிடப்பட்டு ஒட்டப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன்.

தேர்தல் சமயத்தில் எத்தகைய தில்லாலங்கடி வேலைகள் எல்லாம் நடக்கின்றன என்று பாருங்கள்.

தேர்தல் பிரசாரம் முடிகின்ற சமயத்தில் இத்தகைய சுவரொட்டி ஒட்டிய விடயத்தை வெளிப்படுத்துவது ஒரு வகையில் தவறு எனினும், இது போன்ற சுவரொட்டிகளுக்குப் பின்னால் ஒளித்திருக்கும் அரூபக்கரங்களை நினைவூட்டுவதற்காக அவற்றைச் சுட்டிக் காட்டுவதும் ஒருவகையில் சரியானதுதான் என்று நினைக்கிறேன்.

## தேர்தல் பிரச்சாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காலத்தின்போது எவரேனும் தேர்தல் விதிமீறல்களில் ஈடுபட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொழும்புமற்றும்யாழ்ப்பாணம்மாநகர சபைகள் உட்பட 336 உள்ளூராட்சி சபைகளுக்குரிய தேர்தல் நாளைமறுதினம் (6 ஆம் திகதி) நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு கடந்த காலங்களில் பரப்புரைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

தமது ஆட்சிக்கு மக்கள் ஆணை உள்ளது எனவும், அது தொடர வேண்டும் என்பதே மக்களின் நிலைப்பாடு என்பதையும் வெளிப்படுத்துவதற்காக உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் வெற்றி பெற வேண்டும் என்பதில் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி தீவிரம் காட்டியது.

கட்சித் தலைவர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பிரதான பிரச்சாரக் கூட்டங்களில் நேரில் களமிறங்கி வாக்கு வேட்டைக்குரிய பரப்புரைகளில் ஈடுபட்டார். குறிப்பாகவடக்குக்குதேசியமக்கள்சக்திபிரமுகர்கள் படையெடுத்து வந்திருந்தனர்.

நாடாளுமன்றத் தேர்தலின்போது வடக்கில் இருந்து கிடைக்கப்பெற்ற ஆதரவைத் தக்க வைத்துக்கொள்வதில் அநுர அரசு கூடுதல் அக்கறை செலுத்தியது.

அதேவேளை தற்போதைய அரசு பொய் கூறியே ஆட்சிக்கு வந்தது எனவும், வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதையும் மையப்படுத்தி பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பிரச்சாரத்தை முன்னெடுத்தது.

தமது கட்சியால்தான் இந்த நாட்டை நிர்வகிக்க முடியும் எனவும், அடுத்த தேசிய மட்டத்திலான தேர்தலுக்குரிய ஒத்திகையாகவும் இந்தத் தேர்தலை ஐக்கிய மக்கள் சக்தி கருதுகின்றது. சஜித்தின் தலைமைத்துவத்தின் ஆயுளையும் இந்தத் தேர்தல் முடிவுகளே நிர்ணயிக்கவுள்ளன.

அத்துடன், போர் வெற்றி, இராணுவம் உட்பட பழைய புராணங்களைப் பாடி, தேசியவாத உணர்வைத் தூண்டி வாக்கு வேட்டை நடத்துவதற்குரிய பிரச்சாரத்திலேயே மொட்டுக் கட்சி ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

## கஜேந்திகுமாரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம், கிட்டு பூங்காவில் நேற்று இடம்பெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இறுதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

"யாழ்ப்பாணம் எங்கள் இருப்பின் அடையாளம், தமிழ் மக்களின் கலாசார அடையாளம். இலங்கைத் தமிழர்களை, வெளிநாடுகளுக்கு எங்கு சென்றாலும் யாழ்ப்பாணத் தமிழன் என்பார்கள். அது எங்களுடைய மொழி, கலாசாரத்தின் அடையாளமாக இருக்கின்றது. இன்று யாழ்ப்பாணத்தில் இருந்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பியுள்ளவர்களைப் பற்றி பலவிதமான கேலியான விடயங்கள் உலா வருகின்றன. கல்விக்குப் பெயர்போன கல்விச் சமூகம் செறிந்த இந்த மண்ணிலே இருந்து இவர்கள் எப்படி பிரதிநிதிகளாகப் போனார்கள் என்ற கேள்வி எழுகின்றது.

ஒருவர் சொல்கின்றார் யாழ்ப்பாணம் ஏழாலைக்குள்தானே இருக்கின்றது என்கின்றார். இதற்கு முன்னர் இரண்டு இலட்சம் மக்கள்தான் நாட்டின் சனத்தொகை என்றார் மேற்படி நபர். சரி அவருக்கு கணக்குத்தான் தெரியாது என்றால் புவியியலும் தெரியாது. இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டினால் அவர்களது ரவுடி அமைச்சர் , அவரை ரவுடி அமைச்சர் என்பதற்குக் காரணம் ரவுடித்தனமாகச் செயற்படுகின்றார் என்றபோது அவர் அதனை மறுக்கவில்லை, அடுத்த நாள் நானும் ரவுடிதான் எனச் சொல்லி ஒத்துக்கொள்கின்றார். அவர் ஒத்துக்கொண்ட காரணத்தினாலேயே அவருக்குப் பிடித்த அடைமொழியாக இருக்கின்றது. அவருக்கு வேறு அடைமொழி பாவிக்க முடியாது. அதனால் உங்களுக்குத் பிடித்தமான ரவுடி அமைச்சர்.

07





## கஜேந்திகுமாரை...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி..)

இந்த ரவுடி அமைச்சர் சொல்லுகின்றார் சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் வேட்டி கட்டுறார், கொழும்பில் கால் சட்டை போடுகின்றார் என்கின்றார். நான் என்ன ஆடையில் இருந்தாலும் உங்களுக்கு என்ன ஐயா வருத்தம். எனக்கு வழக்குத் தாக்கல் செய்யத்தானே தெரியும் என்கின்றார் அவர். ஆம் எனக்கு வழக்குத் தாக்கல் செய்யத் தெரியும்.

உங்களுடைய கட்சி இதுவரைக்கும் ஊழலுக்கு எதிராகத் தாக்கல் செய்த அனைத்து வழக்குகளிலும் என்னைத்தான் சட்டத்த்ணியாக நியதித்திருக்கின்றார்கள். உங்களுக்கு அது தெரியுமோ தெரியாது. உங்களுக்கு அது தெரிய வாய்ப்பில்லை. உங்களது கட்சித் தலைவர்களிடம் கேளுங்கள் ஊழலுக்கு எதிரான வழக்குகளில் ஏன் சுமந்திரனைச் சட்டத்தரணியாக நியமித்துள்ளீர்கள் எனக் கேளுங்கள்.

மார்ச் மாதமும் சீனி ஊழல் தொடர்பான வழக்கு வந்தது. அதில் சுனில் ஹந்துன்நெத்தி அமைச்சர்தான் மனுதாரர். அவர் சார்பில் நீதிமன்றில் ஆஜராக வாதாடுபவர் நான்.

ஊழலுக்கு எதிராக அது உங்களுடைய கட்சியானாலும் எவரது கட்சியானாலும் முதலிலே வாதாடுவதற்கு என்னைத் தான் நிறுத்துகின்றார்கள். சத்ருரங்க அபயசிங்க என்னும் உங்களது பிரதி அமைச்சர் உள்நாட்டு கடன் மறுசீரமைப்புச் செய்யப்பட்டபோது இந்த நாட்டுத் தொழிலாளர்களின் சேமலாப நிதியைத் திருடுவதற்கு ஒப்பானது எனச் சொல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தபோது அவருக்காகவும் ஆஜராகினதும் நான்தான் ஐயா.

ஊழியர்களின் சேமலாப நிதியை எடுத்து கடன் மறுசீரமைப்பை ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டதற்கு எதிரான வழக்கில் என்னை அழைத்து. வாதாடச் சொன்னீர்கள். இன்று அதேகடன் மறு சீரமைப்பை நீங்கள் தொடர்ச்சியாக கொண்டு செல்கின்றீர்கள். தொழிலாளர்களை சுரண்டுவதாக நீங்களே சொன்ன அதே விடயத்தை ஒருவித மாற்றமும் இல்லாமல் தொடர்ச்சியாக நீங்கள் கொண்டு செல்கின்றீர்கள்.

தேர்தலின் முன்பு இது எல்லாம் மாற்றி அமைப்போம் என்றீர்கள். ஒரு வசனம் கூட மாற்றப்படவில்லை அப்படியே கொண்டு செல்லப்படுகின்றது. முதலாளித்துவ ஒப்பந்தம் என்றீர்கள், நீங்கள் தொழிலாளர் வர்க்கம் என்று சொன்னீர்கள். ஆனால்,அந்த முதலாளித்துவ ஒப்பந்தத்தையே கொண்டு செல்கின்றீர்கள். இது ஊழல் இல்லையா?.

ஊழலுக்கு எதிரானவர்களாக உங்களைக் காட்டிக்கொண்ட நீங்கள் இன்று நீங்கள் செய்கின்ற ஊழல் மிக மோசமான ஊழல். ஒருவரைச் சபாநாயகராக நியமித்தீர்கள். அவர் தன்னைக் கலாநிதி என்று சொல்லிக்கொண்டார். அதைக் கேள்வி கேட்டவுடன், "கலாநிதி சான்றிதழை தவற விட்டுவிட்டேன். எனது பல்கலைக்கழகத்தில் இருந்து எடுக்க வேண்டும். அதுவரை பதவி விலகுகின்றேன்." என்றார்.

இது நடந்தது டிசம்பர் மாதம். நான்கு மாதங்கள் கடந்து விட்டன. இன்னமும் கலாநிதிப் பட்டம் வரவில்லை இது ஊழல் இல்லையா? நீங்கள் உங்களது 159 பேரில் தெரிந்து எடுத்து நாட்டின் 3 ஆவது பிரஜையாக நியமிப்பதற்கு தெரிந்தெடுத்த நபர் கையும் களவுமாக பிடிபட்ட பிறகு அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகியிருக்க வேண்டும். உங்கள் கட்சி அவரைக் கட்சியில் இருந்தே துரத்தியிருக்க வேண்டும். ஏன் இன்னும் செய்யவில்லை? மக்களை முட்டாள் ஆக்குகின்றனர்.

இவ்வாறான இன்னுமோர் ஊழலை நாம் சுட்டிக்காட்டியபடியால் விரிவுரையாளர் கபிலனையும் வைத்துக்கொண்டு அந்த அமைச்சர் ஊடகவியலாளர் மாநாடு நடத்தியுள்ளீர்கள். யாழ்ப்பாணம் மாநகர சபைக்கான வேட்பாளர் மனுவிலே விரிவுரையாளர் கபிலன் தனது வதிவிடமாக எந்த முகவரியைக் கொடுத்திருக்கின்றார். அரியாலையில் உள்ள உங்களது காரியாலய முகவரியைத் தனது வதிவிடமாகப் பொய்யாகச் சொல்லியிருக்கின்றார் மிகப் பெரிய ஊழல்வாதி. அவர் ஏழாலையில் இருக்கின்றார் என உங்களது முதலாவது எம்.பி. சொல்கின்றார்.

"யாழ்ப்பாணம் ஏழாலையில்தானே இருக்கின்றது. ஆகையினால் தேர்தல் கேட்கலானே என உளறுகின்றார். அவர் ஏழாலையில்தான் இருக்கின்றார் என எல்லோருக்கும் தெரியும். அவரது முகவரி, வாக்கு எல்லாம் ஏழாலையில்தான் இருக்கின்றது. யாழ். பல்கலைக்கழகத்திலும் அவரது முகவரியைப் பாருங்கள். அரியாலையா இல்லையே. ஏன் இந்தப் பொய்யுரை. வேட்பு மனுவிலேயே பொய்யான தகவலைக் கொடுத்த ஊழல்வாதியை உங்களது மாநகர நேயர் வேட்பாளர் என அறிவிக்கின்றீர்கள். உங்களுக்குச் சட்டம் தெரியாது என்பதற்கு நாங்கள் என்ன செய்வது?

கடந்த உள்ளூராட்சி மன்றக் காலத்திலே இதே யாழ்ப்பாணம் மாநகர சபையிலேயேதான் சபையின் எல்லைக்கு வெளியே இருந்த ஒருவர் ஒரு றோட்டுக்கு வெளியில் கொக்குவிலில் இருந்தவர் மாநகர சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டபோது நாங்கள் வழக்குத் தாக்கல் செய்து அவரை வெளியேற்றினோம். வழக்குக் கொப்பியும் உண்டு எங்களுக்கு வழக்குத் தாக்கல் செய்யத் தெரியும். 217%18 இலக்க வழக்கு இடம்பெற்றது. 3 வருடங்கள் வெளியே வைத்திருந்தோம்.

ஏன் தன்னுடைய வதிவிடத்தை பொய்யாக உரைத்தமையால். வேட்புமனுவிலே ஒரு பொய்யான முகவரியைக் கொடுத்தால் தப்பி விடலாம் என எண்ணி விட வேண்டாம். இதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அவர் சபை அமர்வுகளில் பங்குகொள்ளவோ, வாக்களிக்கவோ முடியாது என இடைக் காலக் கட்டளையைக் கொடுத்தது. ரவுடி அமைச்சருக்கு இதைப் படித்து விளங்க முடியுமோ தெரியாது.

08






## கஜேந்திகுமாரை...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதைக் கேட்டால் கொழும்பில் இருக்கும் சுமந்திரன் யாழ்ப்பாணத்தில் தேர்தல் கேட்கலாம் என்றால் ஏழாலையில் இருப்பவர் ஏன் யாழ்ப்பாணம் மாநகர சபையில் தேர்தல் கேட்க முடியாது, யாழ்ப்பாணமும் ஏழாலையில்தானே இருக்கின்றது என ஒருவர் சொல்கின்றார்.

நாடாளுமன்ற சட்டத்திலோ, மாகாண சபை சட்டத்திலோ இப்படியான தேவைப்பாடு கிடையாது. ஆனால், உள்ளூராட்சி மன்ற சட்டத்திலே இந்தச் சிறப்பான மிகத் தெளிவான சட்டத் தேவைப்பாடு பிரிவு 7 மற்றும் 8 இல் இருக்கின்றது. அதைத் தெரிந்துகொண்டுதான் ஒரு பொய்யான முகவரி கொடுக்கப் பட்டுள்ளது. ஐயா ரவுடி அமைச்சரே நான் யாழ்ப்பாணத்தில் பிறந்தவன் கஜேந்திரகுமாரைப் போலவோ, விக்னேஸ்வர னைப் போலவோ கொழும்பிலே பிறந்தவனும் அல்ல. எனது யாழ்ப்பாணம் பூர்வீகத்தைக் கேள்வி கேட்க இவர்கள் யார், அவர்களது பூர்வீகத்தை நாங்கள் கேள்வி கேட்கவில்லை. தமிழ் பேசுகின்ற மக்கள் மலையகத்தில் இருந்தாலும் அது முஸ்லிமாக இருந்தாலும் தமிழ் பேசுகின்ற மக்களுக்கு உரித்த கட்சியாகத்தான் இலங்கைத் தமிழரசுக் கட்சி என்றும் இருந்தி ருக்கின்றது. என்னை மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர் என்கின்றார் அந்த அமைச்சர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாருக்குக் கிடைத்த அளவு வாக்கு எனக்கும் கிடைத்தது என்பதை அந்த அமைச்சர் புரிந்துகொள்ள வேண்டும்.

அரவணைக்க நாம் தயாராக இருக்கின்றோம். எமது கட்சியின் தலைவருடைய அனுமதியோடு நான் இதனைச் சொல்லுகின் றேன்.

ஏனெனில் சேர்ந்து பயணிப்பதற்காக அவர் அனைவரின் வீடுகளுக்கும் சென்றார். ஒற்றுமைக்கு நாங்கள் பங்கம் விளைவிப்பவர்கள் அல்லர். கஜேந்திரகுமார் பொன்னம்பலத் துக்குத் தெளிவாகச் சொல்லும் செய்தி ஆம் நீங்கள் அப்படி யாகச் சொன்னதை நாங்கள் வரவேற்கின்றோம், சேர்ந்து பய ணிக்க நாங்கள் தயார். தந்தை செல்வநாயகத்தின் வழியிலே தொடர்ந்து நடப்போமாக இருந்தால் என்பதில் ஒரு நெருடல் இருக்கின்றது. தந்தை செல்வநாயகத்தின் வழியிலே செல்லா மல் விட்டது நாங்களா, நீங்களா?

சமஷ்டி என்கின்ற இணைப்பாட்சி அல்லது கூட்டாட்சி என் கின்ற பெயரையே வைத்திருக்கின்ற கட்சி எங்களுடைய கட்சி. அதை ஏளனம் செய்தவர்களில் முதன்மையானவர்கள் நீங்கள்தானே. பழையதைப் பேசுவதாக எண்ண வேண்டாம். அவர் கூறியதனால் பேசினேன். அதுவும் சேர்ந்து பயணிக்க வருபவருக்கு எதிராகப் பேசுவதாக நினைக்க வேண்டாம்.

2010 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து வெளியேறிய முதலாவது கட்சி கஜேந்திரகுமாரின் கட்சி என்று சற்று முன் சிறில் அண்ணையும் கூறினார். ஒற்றுமைக்கு நாம் எதிர்ப்புக் கிடையாது என்பதற்காகவே இதனைக் கூறுகின் றேன்.

எமது கட்சியில் யார் தலைவராக, செயலாளராக இருக்க வேண்டும் என நீங்கள் உங்களது கூட்டத்தில் வைத்து கூறுகின்




யாழ்ப்பாணத்திலே வந்து தேர்தலில் நிற்கத் திராணி இல்லாத ஒருவர் கடந்த காலத்திலும் தற்போதும் தேசியப் பட்டியலில் வந்து யாழ்ப்பாணத்து பூர்வீகத்தைக் கேள்வி கேட்கின்றார் என்றால் இவரை என்ன செய்வது?

மலையக மக்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டமைக்கு எதிராக கிளர்ந்தெழுந்த தந்தை செல்வநாயகம் தன்னுடைய கட்சியை இரண்டாக உடைத்தார். யாருக்காக மலையக மக்களுக் காக. அந்த உறவுகளுக்காக நாம் எப்போதும் எழுந்து நிற் போம். யாழ்ப்பாணம் மக்கள் ஒரு ரவுடியைத் தொடர்ந்து அமைச்சராக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

யாழ்ப்பாணத்துக்கு ஏற்பட்டுள்ள அவமானத்தைப் போக்கு வதாக இருந்தால் மக்களின் வாக்குகள் பேச வேண்டும். உங்கள் வாக்குச்சீட்டில் நீங்கள் இடும் புள்ளடி அதனைச் சொல் லும்.

தந்தை செல்வநாயகத்தின் வழியிலே தொடர்ந்து நடப் போமாக இருந்தால் எம்மோடு கை கோர்க்கத் தயார் என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நெல்லியடியிலே வைத்து சொல்லியிருக்கின்றார். நல்ல விடயம். இரு கரம் நீட்டி அவரை

றீர்கள். உங்களது கட்சியில் யார் தலைவராக இருக்க வேண்டும் என நாங்கள் சொல்கின்றோமா?. பொன்னம்பலம் என்று பெயர் இருந்தால்தான் உங்கள் கட்சியில் தலைவராக இருக்க முடியும். இதை எப்ப என்றாலும் நாம் இதுவரை சொல்லி இருக்கின்றோமா?.

எங்களது கட்சியில் தந்தை செல்வநாயகம் உயிரோடு இருந்தபோதே சி.மு.இராசமாணிக்கம், இராஜவரோதயம், வன்னியசிங்கம், நாகநாதன், அமிர்தலிங்கம் போன்றோர் தலைவராக இருந்தனர். இந்தத் தெளிவுகள் அவசியம். தந்தை செல்வா வழியிலேயே நாம் நடக்கின்றோம். டட்லி – செல்வா ஒப்பந்தம், பண்டா – செல்வா ஒப்பந்தம் – அந்த இரு ஒப்பந்தங் களில் எங்குமே சமஷ்டி என்ற சொல் கிடையாது. சொற்களி லும் பெயர் பலகைகளிலும் தொங்கிகொண்டு இருப்பவர்கள் அல்ல நாங்கள். உள் அடக்கம் உண்டா எனப் பார்ப்பவர்கள் நாங்கள். ஒரு கட்சி சமஷ்டியைக் கோரும் உரிமை உண்டு என்கின்ற வரலாற்று முக்கியம் வாய்ந்த தீர்ப்பைப் பெற்றவர் களே நாங்கள்தான்." – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காணி பிடுங்கும் அரசு

வடக்கில் கரையோரப் பிரதேசங்களை ஒட்டி சுமார் ஆறாயிரம் ஏக்கர் காணிகளை சுவீகரித்து அரசுடைமையாக்க எடுத்திருக்கும் முயற்சி தமிழ் மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தையும் சீற்றத்தையும் ஏற்படுத்தி நிற்கின்றது.

இது பௌத்த-சிங்களப்பேரினவாத நிகழ்ச்சி நிரலின் தொடர் போக்கு என்று விசனத்துடன் சுட்டிக்காட்டி இருக்கின்றார் நாடாளுமன்றஉறுப்பினர்கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கின்றவடக்கு-தெற்குஉறவை மேலும் பாதிக்கச் செய்யும் நடவடிக்கை இது என்று சுட்டிக்காட்டி உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் அதனால் இந்த சுவீகரிப்புக்கு வழி செய்கின்ற வர்த்தமானியை உடனடியாகக் கைவாங்குமாறு கடிதம் மூலம் ஜனாதிபதியை வலியுறுத்திக் கோரியிருக்கின்றார்.

இத்தகைய வர்த்தமானி அறிவித்தல் மூலம் மக்களின் காணிகளைப் பிடுங்குவது அடாத்தான செயல் என்பதைச் சுட்டிக்காட்டிஅதற்கானகாரணங்களையும் அவர் முன் வைத்திருக்கிறார்.

‡தொடர்ச்சியானஇடப்பெயர்வுகளினால் மக்களின் சாதாரண வாழ்வு குழம்பியுள்ளது. அது இன்னமும் ஒழுங்கமைக்கப்படவில்லை.

‡ கட்டாய இடப்பெயர்வுகளாலும் இப்பிரதேசங்களை அழித்தொழித்த ஆழிப்பேரலையினாலும் மக்கள் காணிகள் தொடர்பான தமது உறுதிகள் மற்றும் ஆவணங்களை இழந்துள்ளனர்.

‡ இக்காணிகளின் இப்போதைய உரித்தாளர்களுக்கு பல வருடங்களுக்கு முன்னரே மரித்த முன் உரித்தாளர்களிடமிருந்து காணிகள் முறையாக உரிமை மாற்றம் செய்யப்படவில்லை.

‡ போர் சூழலால் இடம் பெயர்ந்த பல லட்சம் மக்கள் நாட்டுக்கு வெளியில் வாழ்கிறார்கள். இந்தியாவில் மட்டும் ஒரு லட்சம் பேர் உள்ளனர். இந்தச் சூழ்நிலையில் இந்த மக்கள் இங்கு இல்லாத நிலையில் அதை வசமாகப் பயன்படுத்தி இக்காணிகளை பிடுங்குவது மிக மோசமான நடவடிக்கை.

- இவ்வாறு சுட்டிக்காட்டி உள்ள சுமந்திரன் இத்தகைய நடவடிக்கையை தொடர்வது வடக்கு, கிழக்கு மக்களின் உரிமையை மதிக்காத செயல், மோசமான செயற்பாடு என உறைக்கும் விதத்தில் ஜனாதிபதிக்கு உரைத்திருக்கிறார்.

பேரினவாதபோக்கில்செயற்படும் கொழும்பு ஆட்சி பீடத்தின் காதில் இந்த நியாயமான கோரிக்கை விழுமா என்பது தெரியவில்லை. விழுந்தாலும் அது திருந்தி, இந்த நடவடிக்கையைத் திருத்தும் என்று நம்புவதும் அர்த்தமற்றதுதான்.

## இந்தியா - பாகிஸ்தான் பதற்றம் அதிகரிப்பு:

# பிரதமர் மோடியுடன் காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா நேரில் ஆலோசனை



பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்குப் பின் முதல் முறையாக பிரதமர் நரேந்திர மோடியை ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா சந்தித்துள்ளார்.

பிரதமரின் இல்லத்தில் நேற்று சனிக்கிழமை நடந்த இந்தச் சந்திப்பில், ஜம்மு காஷ்மீரின் தற்போதைய நிலவரம் குறித்து இருவரும் ஆலோசித்தனர். இந்தியா – பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்து வரும் சூழலில், சுமார் 30 நிமிடங்கள் நடந்த இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

பிரதமர் மோடி உடனான இந்தச் சந்திப்பில் பஹல்காம் தீவிரவாத தாக்குதல் மற்றும் பல முக்கிய பிரச்சினைகள் குறித்து முதல்வர் உமர் அப்துல்லா பேசியதாக தேசிய மாநாடு கட்சி எக்ஸ் தள பக்கத்தில் ட்வீட் செய்துள்ளது. முன்னதாக, பஹல்காம் தாக்குதல் மக்களை கொதிப்படைய செய்துள்ளது என்றும், இது ஜம்மு காஷ்மீரில் தீவிரவாதத்துக்கு முற்றுப் புள்ளி வைப்பதற்கான நேரம் என்றும் முதல்வர் உமர் அப்துல்லா கூறியிருந்தார்.

காஷ்மீரின் பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடி கொடுக்க இந்தியா பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. சிந்து நதி நீர் பங்கீடு ஒப்பந்தத்தை நிறுத்தியது, வாகா எல்லையை முடியது, பாகிஸ்தானியர்கள் வெளியேற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில், பாகிஸ்தானில் இருந்து அனைத்து பொருள்கள் இறக்குமதிக்கும் இந்தியா தடை விதித்துள்ளது.

இது குறித்து, இந்திய வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் (டி.ஜி.எப்.டி) வெளியிட்ட அறிவிக்கையில்,

“பாகிஸ்தானில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து வகையாக பொருட்களின் நேரடி அல்லது மறைமுக இறக்குமதிக்கு தடை விதிக்கப்படுகிறது. குறிப்பாக, வழக்கமாக சுதந்திரமாக இறக்குமதி செய்யக்கூடிய பொருட்கள் மற்றும் பிற விதிகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட பொருள்கள் உட்பட அனைத்துக்கும் இது பொருந்தும்.

இந்தக் கட்டுப்பாடு இறக்குமதிக்கு மட்டுமல்ல, இந்தியா வழியாக செல்லும் பொருள்களுக்கும் பொருந்தும். இது உடனடியாக அமலுக்கு வருகிறது. மறு உத்தரவு வரும் வரை இது அமலில் இருக்கும். தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுக் கொள்கைய கருத்தில் கொண்டு இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடையிலிருந்து விலக்கு வேண்டுமானால், மத்திய அரசிடமிருந்து முன் அனுமதி பெற வேண்டியது அவசியம் ஆகும்.” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல், பாகிஸ்தானில் இருந்து வரும் கடிதங்கள், பார்சல்களுக்கு தடை என்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. தரைவழி, வான்வழி என எந்த விதத்திலும் பாகிஸ்தானில் இருந்து வரும் கடிதங்கள், பார்சல்கள் ஊக்குவிக்கப்படாது என இந்திய தபால் துறை தெரிவித்துள்ளது. மறு உத்தரவு வரும் வரை இந்தத் தடை நீடிக்கும் எனத் தெரிகிறது.

பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுக்கும் முடிவை எடுப்பதில் முப்படைகளுக்கும் முழு சுதந்திரம் அளித்து விட்டார் பிரதமர் மோடி. இதையடுத்து கடற்படை கப்பல்கள் அரபிக் கடல் பகுதியில் போர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளன. விமானப் படை விமானங்கள் நெடுஞ்சாலைகளை அவசர காலத்தில் பயன்படுத்துவதற்கான பயிற்சியை மேற்கொண்டு வருகின்றன.

இதனிடையே, இந்திய கடற்படையின் ஊடக பிரிவு புதிய படம் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் ஐ.என்.எஸ். கொல்கத்தா போர்க்ப்பல், துருவ ரக ஹெலிகாப்டர், ஸ்கார்பின் ரக நீர்மூழ்கி கப்பல் ஆகியவை ஒன்றாக அணிவகுத்துள்ளன. கடற்படையின் மூன்று சக்திகள் என அந்தப் படத்துக்கு தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. கடற்படை கப்பல்கள் எல்லாம் போருக்கு தயார் நிலையில் இருக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதை வெளிப்படுத்தும் வகையில் இந்திய கடற்படை இந்தப் படத்தை வெளியிட்டுள்ளது.

# விஜய்க்கு கூடும் கூட்டம் வாக்குகளாக மாறாது

## தமிழக பா.ஜ.க தெரிவிப்பு



“த.வெ.க. தலைவர் விஜய்க்கு கூடும் கூட்டம் வாக்குகளாக மாறாது. இது விஜய்க்கு புரியாது. அவருக்கு போதுமான அனுபவம் இல்லை. விஜய்யைப் பார்க்க வந்தவர்களில் பெரும்பாலானோர் 18 வயதுக்கு உட்பட்டவர்கள். அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையில்லை,”

– இவ்வாறு பா.ஜ.க. பொதுச் செயலாளர் ராம சீனிவாசன் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் மதுரையில் அவர் செய்தியாளர்களிடம் கூகருத்து தெரிவிக்கையில்,

“இந்தியாவில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என மத்திய அரசு அறிவித்துள்ளது. சமீப காலங்களில் எதிர் கட்சிகள், குறிப்பாக ராகுல் காந்தி, தமிழகத்தில் மு.க.ஸ்டாலின் ஆகியோர் அரசியல் ஆயுதமாக பயன்படுத்தி வந்தனர். சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தினால் அதன் பலன்கள் சமூகத்துக்கு எப்படி போகும் என்பது குறித்து ஒரு வரி கூட அவர்கள் பேசவில்லை. அதற்கு பதிலாக மோடி அரசு ஏமாற்றுகிறது என பிரச்சாரம் செய்து வந்தனர்.

இந்தியாவில் 70 ஆண்டுகளாக ஆட்சி செய்தது காங்கிரஸ் கட்சி. அதில் தொடர்ந்து 15 ஆண்டுகளாக மத்திய அரசில் திமுக பங்கெடுத்துள்ளது. இந்திய மாநில கட்சிகளில் மத்திய அரசில் அதிக ஆண்டுகள் பங்கெடுத்தது திமுகதான். அப்போதெல்லாம் இரு கட்சிகளும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தவில்லை. இந்தியா சுதந்திரம் அடைந்ததில் இருந்து சாதிவாரி கணக்கெடுப்பு இல்லை. மொத்தத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்புதான் நடத்தப்பட்டு வந்தது.

2021 இல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டிருக்க வேண்டும்.கொரோனா பரவல் காரணமாக கணக்கெடுப்பு 3 ஆண்டுகள் தள்ளிப்போனது. இதனால் பல சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். பல சமுதாயங்களுக்கு நன்மைகள் ஏற்படும். இப்போது சாதி வாரியாக அறிவியல் பூர்வமான புள்ளிவிவரமும் இல்லை. அதிமுக ஆட்சியில் வன்னியர்களுக்கு வழங்கப்பட்ட 10.5 சதவீத இடஒதுக்கீட்டை சாதிவாரியான புள்ளி விவரம் இல்லாததால் நீதிமன்றம் ரத்து செய்தது.

த.வெ.க. தலைவர் விஜய் தி.மு.க. எதிர்ப்பில் உறுதியாக இருந்து எங்கள் கூட்டணிக்கு வந்தால் வரவேற்போம். தி.மு.வுக்கு எதிரான ஒவ்வொரு ஓட்டும் எங்களுக்கு முக்கியம். தி.மு.க. எதிர்ப்பு ஓட்டுகள் எங்களுக்கு கிடைக்க வேண்டும் என்பதே எங்களின் நோக்கம். தி.மு.வை வீழ்த்த நினைக்கும் அனைவரையும் வரவேற்போம். பொது எதிரியை வீழ்த்த ஒன்று சேர்வது தான் கூட்டணி. தேர்தல் நேரங்களில் கொள்கை அடிப்படையில் கூட்டணி அமைக்க முடியாது. நாடாளுமன்ற தேர்தலுக்கு பிறகு இண்டியா கூட்டணி தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வருகிறது. தமிழகத்திலும், பிஹாரிலும் இண்டியா கூட்டணி வீழ்ச்சியடையும்.

விஜய்க்கு கூடும் கூட்டம் வாக்குகளாக மாறாது. இது விஜய்க்கு புரியாது. அவருக்கு போதுமான அனுபவம் இல்லை. விஜய்யைப் பார்க்க வந்தவர்களில் பெரும்பாலானோர் 18 வயதுக்கு உட்பட்டவர்கள். அவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையில்லை. தமிழகத்தில் பாஜகவினர் ஆர்ப்பாட்டம் நடத்தலாம் என கனவு கண்டாலோ, போலீஸார் வழக்கு பதிவு செய்கின்றனர்” என்று அவர் கூறினார்.



# அவுஸ்திரேலிய பொதுத் தேர்தலில் தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றது

அவுஸ்திரேலிய பொதுத் தேர்தலில் பிரதமர் அன்டனி அல்பானீஸ் தலைமையிலான தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி 2004இல் ஜோன் ஹோவர்டுக்கு பின்னர் முழுமையான ஒரு பதவிக்காலத்தைக் கடந்துவிட்டு மீண்டும் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பிரதமராக அன்டனி அல்பானீஸ் பதிவாகியுள்ளார்.

அத்துடன் அவுஸ்திரேலிய பொதுத் தேர்தலில் அன்டனி அல்பானீஸ் தலைமையிலான தொழிலாளர் கட்சி வெற்றி பெற்றது உறுதி செய்யப்பட்டாலும், அவருக்குப் பெரும்பான்மை அதிகாரம் உள்ளதா என்பது இன்னும் தெளிவாகத்தெரியவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.




# முடிவுக்கு வரும் ஸ்கைப்!

மைக்ரோசாப்ட் நிறுவனம் தனது செயலியான ஸ்கைப்-ஐ வரும் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் மூடப்போவதாக அறிவித்துள்ளது.

எவ்வாறு இருப்பினும் ஸ்கைப்பிற்குப் பதிலாக பயனாளர்கள் மைக்ரோசாப்ட் டீம்ஸ் செயலியை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் ஸ்கைப் பயனாளர்கள் தங்களது பயனர் விவரங்களை கொண்டே டீம்ஸ் செயலியில் இணைந்து கொள்ளலாம் என்றும் பழைய உரையாடல்கள் மற்றும் தொடர்புகள் போன்றவை அப்படியே இருக்கும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொரானா காலக்கட்டத்தில் ஜூம் செயலி, கூகுள் மீட் உள்ளிட்ட செயலிகளை பயனர்கள் பெரிதும் பயன்படுத்தியதால் ஸ்கைப் தளத்திற்கான பயனர்கள் எண்ணிக்கை குறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.





# அமெரிக்காவில் வாகன விபத்து; 7 பேர் உயிரிழப்பு, 8 பேர் காயம்

அமெரிக்காவில் உள்ள யெல்லோஸ்டோன் தேசிய பூங்காவிற்கு செல்லும் நெடுஞ்சாலையில் லொறியொன்றுடன் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற வான் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இத்தாலியைச் சேர்ந்த இரண்டு பேர் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்விபத்தில்8பேர்காயம் அடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ் விபத்துக்கான காரணம் குறித்து பாலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.







# தமிழரசுக் கட்சிக்கே வாக்களிக்க வேண்டும்

## மக்களிடம் கோருகின்றார் ஆனந்தசங்கரி

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குத் தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் எனவும், வேறுபாடுகளை மறந்து தேர்தலின் பின்னர் அனைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைய வேண்டும் எனவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் உள்ள அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை ஊடக சந்திப்பை நடத்திய வேளை அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொறுப்புக்களைப் பகிர்ந்து ஏற்க அனைவரும் ஒற்றுமையாக ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.




# 5,6,7 ஆம் திகதிகளில் மட்டுப்படுத்தப்படும் கடவுச்சீட்டு விநியோகம்: திணைக்களம் அறிவிப்பு

கடவுச்சீட்டு விநியோகிக்கும் ஒருநாள் மற்றும் சாதாரண சேவைகள் எதிர்வரும் 05, 06, 07 ஆம் திகதிகளில் மட்டுப்படுத்தப்படவுள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கடமைகள் காரணமாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் கூறியுள்ளது.

ஒருநாள் சேவைக்காக அமுலிலுள்ள 24 மணித்தியால சேவை குறித்த நாள்களில் இடம்பெறாது எனவும் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 06, 07 ஆம் திகதிகளில் ஆட்பதிவு திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் மாகாண அலுவலகங்களில், ஒரு நாள் சேவை உள்ளிட்ட மக்கள் சேவைகள் இடம்பெறாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக மேல் மாகாண வாகன வருமான வரிபத்திரம் விநியோகிக்கும் பணிகள் எதிர்வரும் 05, 06 ஆம் திகதிகளில் இடம்பெறாதென மேல் மாகாண பிரதான செயலாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறித்த விநியோக சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதும் உரிய நிதியை செலுத்தி சேவையை பெற்றுக் கொள்ள முடியுமெனவு மேலதிக தண்டபணம் அறவிடப்படமாட்டாதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காரணமாக நாட்டின் அனைத்து பாடசாலைகளுக்கும் 05, 06 ஆம் திகதிகளில் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

மே மாதம் 07 ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.







# ஆவங்காலில் தமிழ்த் தேசியப் பேரவையின் பிரசாரம்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக் குட்பட்ட ஆவரங்காலில் தமிழ்த் தேசியப் பேரவையின் 5 ஆம் வட்டார வேட்பாளரான சி.ஜெயானந்தனை ஆதரித்து ஆவரங்காலில் இரு வேறு இடங்களில் பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றன.

முதலில் ஆவரங்கால் எவரெஸ்ட் விளையாட்டுக் கழக மைதானத்திலும், பின்னர் சர்வோதய வீதியில் அமைந்துள்ள திலீபன் நினைவுத் தூபிக்கருகிலும் பிரசாரக் கூட்டங்கள் நடைபெற்றன.

இந்தக் கூட்டங்களில் தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஸ்ரீகாந்தா மற்றும்தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் ஆசிரியர் ஞானகுணேஸ்வரி கமலச்செல்வம் ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.



உள்ளூராட்சி சபை
தேர்தல் களம்

# ஆளும் கட்சியுடன் ஜனாதிபதியும் கபிலனின் பின்னால் உள்ளாராம்

## அமைச்சர் சந்திரசேகரர் சண்டப்பிரசண்டம்




எங்கள் யாழ் மாநகர முதல்வர் வேட்பாளர் கபிலன் தனிநபர் அல்லர். அவர் பின்னால் கட்சி உள்ளது. எங்களிடம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி உள்ளார். மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை உள்ள அரசாங்கம் இருக்கிறது. கபிலன் எதிர்வரும் 7ஆம் திகதி மேயராக பதவியேற்பார். அதன் பின் முடியுமானால் விளையாட்டுகளை பார்ப்போம். – இவ்வாறு நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்திருக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாநகர மேயர் வேட்பாளர் முன்னாள் பல்கலைக்கழக விரிவுரையாளர் சுந்தரமூர்த்தி கபிலனின் வதிவிடப் பிரச்சினை பல்வேறு சர்சைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில் அவர் ஏழாழையில் வதிவிட முகவரியை கொண்டவர் என்பது உறுதியாகியுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாநகர மேயர் வேட்பாளராக முன்னாள் பல்கலைக்கழக விரிவுரையாளர் சுந்தரமூர்த்தி கபிலன் இல 298 கண்டி வீதி, அரியாலையை எனும் முகவரியை (தற்போதைய ஜே.வி.பி அலுவலக முகவரி வசிப்பிடமாகக் கொண்டவர் என விண்ணப்பபடிவத்தில் வதிவிட முகவரி நிரப்பட்டு வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் வசிக்காத ஒருவர் போலியான முகவரியை வழங்கி மேயர் வேட்பாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றார் எனப் பலரும் தங்கள் விசனங்களை வெளியிட்டுவந்தனர்.

இதற்கிடையில் அண்மையில் தனியார் ஊடகம் ஒன்றின் நேர்காணல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன், யாழ் மாநகர எல்லைக்குள் வசிக்காத தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாநகர மேயர் வேட்பாளர் கபிலன் மேயராக அல்ல, யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினராகக் கூட பதவி வகிக்க முடியாது, அவரை உறுப்பினராக நியமித்தால் அடுத்த நாளே அதனைத் தடுப்பதற்கு வழக்குத் தாக்கல் செய்வோம், அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார்நிலையில் உள்ளன எனத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்றையதினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் –

சுமந்திரனுக்கு வழக்கு தாக்கல் செய்வதைத் தவிர வேறு எதுவும் தெரியாது. கபிலன் தனிநபர் அல்லர். அவர் பின்னால் கட்சி உள்ளது. எங்களிடம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி உள்ளார். மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை உள்ள அரசாங்கம் இருக்கிறது. கபிலன் எதிர் வரும் 7ஆம் திகதி மேயராகப் பதவி யேற்பார். அதன் பின் முடியுமானால் விளையாட்டுகளைப் பார்ப்போம். – எனத் தெரிவித்திருந்தார்.

இதற்கு சுமந்திரன் தெரிவித்த பதில் இன்று தலைப்புச் செய்தியில் இடம் பெற்றுள்ளது.

இந் நிலையில் தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாநகர மேயர் வேட்பாளர் முன்னாள் பல்கலைக்கழக விரிவுரையாளர் சுந்தரமூர்த்தி கபிலனின் ஏழாலை வதிவிட முகவரியை கொண்டவர் என்பது உறுதியாகியுள்ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபைக் குட்பட்ட 3ஆம் வட்டாரமான ஏழாலை மத்தியில் அமைந்துள்ள ஏழாலை மகா வித்தியாலயத்தில் வாக்களிக்க தகுதிபெற்றுள்ள நிலையில் அவர் தனது வதிவிட முகவரியை கண்டி வாதி, அரியாலை என வேட்புமனுவில் குறிப்பிட்டிருந்தமை பல்வேறு சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது.

உள்ளூராட்சிமன்ற தேர்தல் சட்டங்களின் பிரகாரம் வர்த்தமானி ஊடாக உறுப்பினராக வெளிப்படுத்தப்படும் நபர்கள் மீது வதிவிடப்பிரச்சினை தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யும் பட்சத்தில் குறித்த நபர் தாம் வேட்புமனு தாக்கல் செய்த பிரதேச எல்லைக்குள் வதிவிடத்தை உறுதிப்படுத்த தவறினால் அவரின் உறுப்பினர் பதவி வறிதாக்கப்படும் என்பது குறிப்பிடதக்கது.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE

# வடக்கில் ஆறாயிரம் ஏக்கரை சுவீகரிப்பது பேரினவாத நிகழ்ச்சி நிரலின் அங்கம்தான்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. கண்டனம்



(பிரபாகரன் டிலக்சன்)

வர்த்தமானி மூலம் தமிழ்த் தேசத்தின் வடக்கு கடற்பரப்பில் ஆறாயிரம் ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் இனவாதிகள் என்று குறிப்பிட்டவர்கள்கூட இவ்வளவு மோசமாக நடக்கவில்லை. 75வருட சிங்கள – பௌத்த பேரினவாவாத நிகழ்ச்சி நிரல் இவர்களின் ஆட்சியிலும் தொடர்கிறது என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய பேரவையின் யாழ் மாவட்டத்திற்கான இறுதொ பிரசாரக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணம் றக்கா வீதியில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

76 வருடங்களாக எந்தவித விட்டுக்கொடுப்புகளும் இன்றி தமிழ்த் தேசியத்திற்கு வாக்களித்து வந்த தமிழீழ மக்கள் சரித்திரத்தில் முதற்தடவையாக ஒரு பேரினவாத கட்சிக்கு ஆணையை வழங்கியிருந்தார் என்ற தீவிரமான கருத்துருவாக்கம் செய்யப்பட்டுவருகின்ற நிலையிலே இந்த உள்ளூராட்சித் தேர்தலை நாங்கள் எதிர்கொள்கிறோம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெளிப்படுத்தப்பட்ட தவறான கருத்துருவாக்கம் முறியடிக்கப்பட்டு தமிழ்த் தேச மக்கள் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டோடு இன்றும் உறுதியாக உள்ளார்கள் என்ற செய்தியை வெளிப்படுத்த கடமைப்பட்டிருக்கின்றோம். எனவே இந்தத் தேர்தல் தமிழ் மக்களுக்கு மிகவும் முக்கியமான தேர்தல்.

ஒட்டுமொத்த தமிழ்த் தேசியத்தின் உரிமைப்பயணம் இந்த தேர்தலிலே தங்கியுள்ளது. மக்கள் ஆய்வு செய்து வாக்களிக்க வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியினர் கடந்த தேர்தல்களில் இனவாதத்தை இல்லாமல் செய்வதே தங்களின் நோக்கம் என கடுமையான பிரசாரங்களை செய்து வாக்குகளை பெற்று ஆட்சிக்கு வந்தார்கள். இவர்கள் இனவாதத்தைகைவிட்டு இந்த ஏழு மாத காலத்தில் செயற்பட்டார்களா என்ற பதிலைத் தேட வேண்டும். அந்த பதில் மிக முக்கியமானது.

இந்த அரசாங்கம் கூறியதுபடி அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை. பயங்கரவாத தடுப்புச் சட்டம் முற்றாக நீக்கப்படவில்லை. பொறுப்புக்கூறல் விடயத்தில் கடந்தகால ஆட்சியாளர்களின் கொள்கைகளையே இவர்கள் பின்பற்றுகிறார்கள். இந்த அரசாங்கம் யாரை இனவாதிகள் என்று கூறியதோ அவர்கள் பின்பற்றும் அதே நிலைப்பாட்டையே இவர்களும் கடைப்பிடிக்கிறார்கள்.

காணிகளை விடுவிப்போம் என தேசிய மக்கள் சக்தியினர் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூட பதிவுசெய்தார்கள். ஆனால் தற்போது வர்த்தமானி மூலம் தமிழ்த் தேசத்தின் வடக்கு கடற்பரப்பில் ஆறாயிரம் ஏக்கர் காணிகளை சுவீகரிப்புற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் இனவாதிகள் என்று குறிப்பிட்டவர்கள்கூட இவ்வளவு மோசமாக நடக்கவில்லை. 75வருட சிங்கள பௌத்த பேரினவாவாத நிகழ்ச்சி நிரல் இவர்களின் ஆட்சியிலும் தொடர்கிறது.

தமிழ் தேசத்தினுடைய சுயாட்சி உரிமை, சுயநிர்ணயம், சமஷ்டி போன்ற விடயங்களை சிங்கள, பௌத்த பேரினவாதம் தருவதற்கு முன்வரப்போவதில்லை என்பதால், தமிழ்த் தேசத்தின் கரையோர பிரதேசத்தை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவர முயற்சிக்கிறார்கள். தமிழ்த் தேசம் சிங்கள தேசத்திடமிருந்து விடுதலையை ஐக்கிய இலங்கைக்குள் பெறுவதற்கு விரும்பியிருந்தாலும் அது நிராகரிக்கப்பட்டால் எங்களுடைய நாட்டை பிரிந்தென்றாலும் நாங்கள் அங்கீரிக்கப்பட்டே ஆகவேண்டும் என்ற அடிப்படையில் ஆயுதம் ஏந்தி போராடினோம். அது வரலாறு. அதனை எவராலும் மறுக்க முடியாது.

தமிழ் மக்களின் விடுதலை தாகத்தை எவராலும் நசுக்க முடியாது என்பதை சிங்கள, பௌத்த பேரினவாதம் நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறது. தமிழ்த் தேசத்தில் மீண்டும் அகிம்சைப் போராட்டத்தையும் தாண்டி ஆயுதப் போராட்டம் இடம்பெறலாம் என எண்ணுவதால் கரையோரத்தை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தால் மாத்திரமே ஆயுதம் கடல் வழியூடாக இறக்குமதி செய்வதை தடுக்கலாம் என்பதற்காகவே கரையோரத்தை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர செயற்பட்டு வருகிறார்கள்.

தாங்கள் இனவாதிகள் அல்லர் எனக் கூறி இதுவரை இல்லாத மோசமான செயற்பாட்டை இந்த அரசாங்கம் செய்து வருகிறது. இந்தத் தேர்தல் காலத்திலும் தமிழ் தேச மக்களை முட்டாள்கள் என கருதி இவ்வாறு செயற்பட்டு வருகிறார்கள் என்பதை மக்கள் உணர வேண்டும். எனவே இந்த தேசிய மக்கள் சக்தியினை மக்கள் புறக்கணிக்க வேண்டும்.

தேசியத் தலைவர் உருவாக்கிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்று கூறி மக்களை ஏமாற்றி வாக்கு சேகரித்தது போல், இன்று இலங்கை தமிழரசுக்கட்சி, தந்தைசெல்வாவின் தமிழரசுக் கட்சி என்ற பெயரை பயன்படுத்தி மக்களை ஏமாற்றி வருகிறார்கள்.

அநுரகுமார திஸநாயக்கவினுடைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் “ஏக்கியராஜ்ஜிய“ எனும் ஒற்றையாட்சி அரசமைப்பை நிறைவேற்றப்போகின்ற நிலமையில், அந்த அந்த அரசமைப்பைத் தயாரித்து எழுதுவதில் தமிழரசுக் கட்சியும் பங்காளிகள். இவர்கள் ஸ்தாபக தலைவர் தந்தை செல்வாக்கு துரோகம்

தொடர்ச்சி ▼

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

## வடக்கில் ஆறாயிரம் ஏக்கரை சுவீகரிப்பது பேரினவாத நிகழ்ச்சி நிரலின் அங்கம்தான்

**தொடர்ச்சி▲**

செய்கிறார்கள்.

தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவம் ஒட்டுமொத்த தமிழர்களுடைய உரிமை பயணத்தினை கேள்விக்கு உட்படுத்தும் வகையில் முடிவுகளை எடுக்கிறது. அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ள "ஏக்கியராஜ்ஜிய" அரசமைப்பு தமிழர்களுடைய ஆதரவோடு நிறைவேற்றுவதாக இருந்தால் அதற்கு பிற்பாடு நாங்கள் தமிழ்த் தேசம் தொடர்பாகவும், தமிழர்களின் சுயாட்சி தொடர்பாகவும் பேசுவதில் அர்த்தம் இல்லாமல் போகும். அதற்குத்தான் தமிழரசுக் கட்சி முயல்கின்றது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலிற்கு பிறகு நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய 19 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட அணியை உருவாக்கி தமிழ்த் தேசத்தின் உறுதியான நிலைப்பாட்டை சர்வதேசத்திற்கும் மக்களுக்கும் காட்டும் நோக்கில் நாங்கள் தமிழரசு கட்சியோடு பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தோம். அவை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டிருந்தால் தேசிய மக்கள் சக்தியின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களை தவிர்த்து, வைத்தியர் அர்ச்சுனா உட்பட ஏனைய 11பேர் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை பலமான அணியாக வலியுறுத்தக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கும்.

ஆனால் இவை நடைபெற்று விடக்கூடாது என்பதில் சுமந்திரனுக்கு கட்டுப்பட்ட தமிழரசு மத்தியகுழு பேச்சுவார்த்தையை நிறுத்தியது. எந்தளவு தூரத்திற்கு தேசிய மக்கள் சக்தியை நிராகரிக்க வேண்டுமோ அதே அளவிற்கு தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத்தையும் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும். இந்த தேர்தலில் மக்கள் நிராகரித்தால் தமிழரசுக் கட்சிக்குள்ளே விவாதம் ஒன்று ஏற்படும். தவறான தலைமைத்தும் ஓரங்கட்டப்படும்.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன் அநுர அரசாங்கம் ஒற்றையாட்சி அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கும். 8 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட தமிழரசுக் கட்சியினை ஓரம்கட்டிவிட்டு ஒற்றையாட்சி அரசமைப்பு நிறைவேற்றப்படுவதை தோற்கடிக்க முடியாது. குறைந்தது பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு உருவாக்க தமிழரசுக் கட்சியின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களின் உதவி தேவை. ஆகவே தமிழரசுக் கட்சி உள்ளகரீதியாக திருந்தவேண்டும். அதற்கு பிழையான தலைமைத்துவதற்கு பாடம்புகட்ட வேண்டும்.

எங்களுடைய இனம் வாழ்வதாக இருந்தால் தமிழ்த் தேசிய பேரவை மக்களுடைய ஏகோபித்த ஆதரவைக் கொண்ட அமைப்பாக உருவெடுக்காதுவிட்டால் எங்களுடைய உரிமைப் பயணம் முடிவுக்குவரும். – என்றார்.



## வவுனியாவில் றிசாட்டின் இறுதி பரப்புரைக் கூட்டம்!

**(கி.வசந்தன்)**

ஐக்கிய மக்கள் சக்தியின் இறுதிப் பிரசாரக் கூட்டம் நாடாளுமன்ற உறுப்பினர் றிசாட் பதியுதீன் தலைமையில் வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் முதன்மை அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான றிசாட் பதியுதீன் கலந்து கொண்டிருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக வவுனியா மாநகர சபைக்காக பட்டானிச்சிபுளியங்குளம் வட்டாரத்தில் லரீப், அப்துல் பாரி ஆகியோர் போட்டியிடுகின்ற நிலையில் அவர்களை ஆதரித்து இப் பிரச்சாரக் கூட்டம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் மௌலவிகள், உலமாக்கள், கட்சியின் தொண்டர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.





உள்ளூராட்சி சபை
தேர்தல் களம்

# வவுனியாவில் மஸ்தானின் இறுதிப் பிரசாரக் கூட்டம்

## பெரும் எண்ணிக்கையானோர் அணிதிரள்வு



(கி.வசந்தன்)

இலங்கைத் தொழிலாளர் கட்சியின் இறுதி பிரச்சார கூட்டம் வவுனியா பட்டாணிச்சூர் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் முதன்மை அதிதியாக கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான காதர் மஸ்தான் கலந்துகொண்டிருந்தார்.

இலங்கை தொழிலாளர் கட்சி சார்பாக வவுனியா மாநகர சபைக்காக பட்டானிச்சிபுளியங்குளம் வட்டாரத்தில் முநௌபர், பர்ஸான், சிப்தி, நாசில் ஆகியோர் போட்டியிடுகின்ற நிலையில் அவர்களை ஆதரித்து இப் பிரச்சாரக் கூட்டம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் மௌலவிகள், உலமாக்கள், கட்சியின் தொண்டர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

# தேசியக் கட்சிகளுக்கு போடுகின்ற வாக்கு நமக்கு நாமே சூனியம் வைப்பது போன்றது

## வவுனியா சுயேச்சை முதன்மை வேட்பாளர் பிறேமதாஸ் விளக்கம்

(கி.வசந்தன்)

தேசியக் கட்சிகளுக்குப் போடும் வாக்கு நமக்கு நாமே சூனியம் வைப்பது போன்றது என வவுனியா மாநகர சபையில் பசு சின்னத்தில் சுயேட்சைக் குழு -02 இல் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் சி.பிறேமதாஸ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் அவரது அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

அரசியல் ஆதிக்கம் நிறைந்த அதிகார சபைகளே எங்கும் காணப்படுகின்றன். சிங்களத் தேசிய கட்சிகளாலும், தமிழ் தேசியக் கட்சிகளாலும் காலம் காலமாக ஏமாற்றப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு, தலைமையிழந்து கேட்போர் அற்ற நிலையில் நிர்க்கதியாகி துரோகிகளுடன் இருப்பதை விட எதிரியுடன் சேர்ந்து உரிமை இழந்தாலும் நிம்மதியாக வாழ்ந்தால் போதும் என மனவிரக்தி ஏற்பட்டு இன்றைய அரசாங்கத்தை ஆதரித்து வடக்கில் 5 ஆசனங்களைக் கொடுத்துள்ளோம்.

159 நாடாளுமன்ற உறுப்பினர்கள். சர்வ அதிகாரம் கொண்ட ஜனாதிபதி. என்ன செய்ய முடியாது? அது போதாது என்று உள்ளூராட்சி சபை அதிகாரங்களையும் தேசிய மக்கள் சக்திக்கு தாருங்கள், அப்போது தான் நிதி ஒதுக்குவோம் என்கிறார் ஜனாதிபதி. அதிகாரம் தந்தால் மட்டுமே நிதி எனக் கூறுவது ஊழலுக்கு ஒப்பான கருத்து இல்லையா?



எமது மக்களின் வரிப்பணன், தண்டப் பணம் என்பனவே திறைசேரியில் இருந்து பிரித்து அனுப்பப்படுகின்றது. இது எந்த அரசாங்கம் வந்தாலும் செய்ய வேண்டிய கட்டாயம். தேசிய கட்சிகளுக்கு அளிக்கும் வாக்கானது சிறுபான்மையினரின் விகிதாசாரத்தை கேள்விக் குறியாக்கும். நீங்கள் சிந்தியுங்கள்.

எமது எல்லை நகரமான வவுனியா நகரசபை மாநகர சபையாக மாறும் போது எல்லைகள் விஸ்தரிக்கப்படும். இன விகிதாசாரம் மாறும். அதன் முன்னேற்பாடாகவே இந்த அரசு வடக்கை குறிவைத்து பிரச்சாரம் செய்கிறது. நாடாளுமன்றத் தேர்தலில் சொன்ன வாக்குறுதிகளை நிறைவு செய்யவில்லை. அரசியல் கைதிகளை விடுதலை செய்வோம் என்றார்கள். இப்போது அப்படியான கைதிகளே இல்லை என்கிறார்கள். நாம் தமிழர்கள் என்பதால் எமது அரசியல் கைதிகள் விடுவிக்கப் படவில்லை.

சுனாமி கட்டமைப்பு உருவாக்கப்பட்ட போது வடக்கிற்கு உதவக் கூடாது என போராட்டம் செய்த தோழர்களின் அரசு. அப்படியான மனிதபிமானம் இல்லாதவர்கள் எப்படி நமக்கான தீர்வை தருவார்கள்? இருந்தும் நம்பினோம். வாக்களித்தோம். அதுவும் போதாது என்று மக்களுக்காகவுள்ள உள்ளூராட்சி சபைகளின் கடைசி அதிகாரத்தையும் தாருங்கள் என்று கேட்டு நிற்கிறார்கள்.

எமது கிராம அபிவிருத்திக்கான தேர்தல். தமிழ் தேசிய கட்சிகளின் ஒற்றுமையின்மையே இதற்கு எல்லாம் காரணம். அவர்கள் மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பும், விரக்தியும், நிர்கதியாக நின்ற போது, சந்தர்ப்பம் பார்த்து உள்ளே நுழைந்து, ஆசை வார்த்தை கூறி ஏமாற்றுகிறார்கள். விழிப்படையுங்கள். தேசிய கட்சிகளுக்கு போடும் வாக்கு நமக்கு நாமே சூனியம் வைப்பது போன்றது.

உங்கள் கிராமத்தில் உள்ள தற்துணிவுள்ள, சிறந்த சமூக சேவை செய்கின்ற, ஒழுக்கமுள்ள, கருணை உள்ளம் கொண்ட ஒருவரை தெரிவு செய்யுங்களை. இது உங்களுக்கான தேர்தல். தேசிய கட்சிகள் வேண்டுமா என்பதை உங்களின் பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக சுயமாக சிந்தித்து வாக்களியுங்கள்.

நாம் பல்வேறு புதிய திட்டங்களுடன் மக்களுக்கான சேவையை கொண்டு இந்த தேர்தலில் களமிறங்கியுள்ளோம். எமக்கு கிடைக்கும் கொடுப்பனவை, எமது கிராம, கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கே கொடுப்போம். எனவே மக்கள் சிந்தித்து வாக்களியுங்கள். – எனத் தெரிவித்தார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

### தாங்கள் ஊழல், மோசடிக்காரரர்கள் இல்லையென்றால்

# மே தினக் கூட்டச் செலவு விவரத்தை ஆளும் தரப்பு பகிரங்கப்படுத்துமா?

### சாணக்கியன் எம்.பி. அரச பிரமுகர்களுக்கு சவால்



**(வாலகிருஸ்ணா)**

தேசிய மக்கள் சக்தியினர் ஊழல் வாதிகள், மோசடி செய்கின்றவர்கள். இல்லையென்றால் நேற்று நடைபெற்ற மேதினத்திற்கு செலவுசெய்த செலவீனங்களை வெளிப்படுத்துங்கள் என இலங்கை தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் சவால் விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேசத்தில் இலங்கை தமிழரசுக்கட்சியின் கீழ் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்கும் வகையிலான பல்வேறு கூட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

திருப்பழுகாமம் கலாசார மண்டபத்தில் திருப்பழுகாமம் வட்டார வேட்பாளர்களை ஆதரிக்கும் வகையிலான பொதுக்கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது.

இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பில் திருப்பழுகாமம் வட்டாரத்தில் போட்டியிடும் நா.இந்திரநாதன், வீ.அரசரெத்தினம் ஆகியோரை ஆதரிக்கும் வகையில் இந்த பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர் –

இம்முறை இந்தத் தேர்தலில் நாங்கள் எம்முடைய மக்களுக்கு இலங்கை தமிழரசு கட்சிக்கு வாக்களிக்குமாறு கேட்பதற்கான சில காரணங்கள் உள்ளன. சிலர் நினைக்கலாம் இது ஒரு வெறுமனே வட்டார தேர்தல், இந்த தேர்தலில் இங்கு இருவர் போட்டியிடுகிறார்கள், இவர்களைத் தெரிவு செய்தால் எமது வடிகானைப் பூர்த்தி செய்து தருவார்கள், வீதிகளை புனரமைத்து தருவார்கள், இல்லை என்றால் பிரதேச சபை செய்யும் பணிகளை செய்வார்கள் என்று நினைக்கலாம். நாம் அதையும் செய்யத்தான் வேண்டும்.

ஆனால் இந்த தேர்தலில் நாம் வெற்றி பெற வேண்டியதற்கான காரணங்கள் அதைத் தாண்டியும் காணப்படுகின்றன. நாடு பூராகவும் அநுரகுமார திஸநாயக்கவுடன் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த மக்களும், வட மாகாணத்தைச் சேர்ந்த மக்களும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இருந்தமையை வைத்துக் கொண்டு இன்று அவருடைய கட்சியின் மனதில் ஓர் எண்ணம் வந்திருக்கின்றது. தாங்கள்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று ஓர் எண்ணம் தோன்றியிருக்கின்றது.

அந்த எண்ணத்தினுடைய வெளிப்பாடாக அண்மையில் பிமல் ரத்னாயக்கவவுனியா மாவட்டத்திற்கு சென்ற பொழுது, தமிழ் மக்களுடைய கட்சி என்று நாங்கள் செய்வது அனைத்தும் தமிழ் மக்களுக்கு துரோகமான செயல்கள், ஆனால் தாங்கள்தான் தமிழ் மக்களின் கட்சி என்று கூறுகின்றார். இந்த தேர்தலைப் பொறுத்த அளவில் எங்களுடைய கட்சிக்கு இந்த தேர்தலில் இந்த வட்டாரங்களை வெல்வது என்பது இலகுவாக விடயம். தமிழரசுக் கட்சி இந்தப் பிரதேச சபையிலே தன்னிச்சையாக ஆட்சி அமைக்கும் என்பதும் உறுதி செய்யப்பட்ட விடயம்.

இவ்வாறு இருக்கின்ற போதும் ஏன் நாங்கள் இவ்வாறான கூட்டங்களை நடத்துகின்றோம் என்று மக்கள் சற்று சிந்திக்க வேண்டும். எமக்கு இந்த கூட்டங்களை நடத்துவதற்கு நேரம் போதாது காணப்படுகின்றது. ஆனால் சில கட்சிகள் கூட்டங்களே நடத்தாமல் இருக்கின்றார்கள். ஒரு மண்டபத்தில் பார்த்தேன், ஒரு கட்சியினுடைய கூட்டம், வேட்பாளர்களை தவிர வேறு எவரும் இல்லை. அதுவும் இந்த தொகுதிக்கான கூட்டம்.

இந்த ஆதரவு அனைத்தையும் நாம் வைத்துக் கொண்டு ஒரு பலமான செய்தியை அரசாங்கத்திற்கு சொல்ல வேண்டும். அத்தோடு சர்வதேச சமூகத்திற்கும் சொல்ல வேண்டும். அது என்ன என்றால், நாட்டிலேயே ஜனாதிபதி தாங்கள்தான் தமிழ் மக்களுடைய கட்சி என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற போது, நாங்களே தமிழ் மக்களுக்கான கட்சி, உண்மையில் தமிழ் மக்களை நேசிக்கின்ற கட்சி, தமிழ் மக்களது எதிர்காலத்திற்காக செயல்படுகின்ற கட்சி, விடுதலைப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் மக்களது அரசியல் இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்காக தமிழ் மக்களது அரசியல் எதிர்காலத்தை ஒரு சிறந்த எதிர்காலமாக மாற்றி அமைப்பதற்காகவும் செயல்படுகின்ற கட்சி எங்களுடைய கட்சி என்பதை உரத்துச் சொல்ல வேண்டும்.

அநுரகுமாரா திசாநாயக்க அவர்கள் தாங்கள் தான் தமிழ் மக்களுடைய கட்சி என்று சொல்லுகின்ற நிலையில் நாங்கள் எங்களுடைய வட்டாரங்களை வெறும் 51 வீதமான வாக்குகளால் வென்றால் போதாது. சாதாரண ஒரு நிலை இருக்கின்ற போது 51 வீதமான வாக்குகள் பெற

தொடர்ச்சி ▼

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# மே தினக் கூட்டச் செலவு விவரத்தை ஆளும் தரப்பு பகிரங்கப்படுத்துமா?





தொடர்ச்சி ▲

றால் நாங்கள் வெல்லுவோம். ஆட்சி அமைப்போம். ஆனால் இந்தத் தேர்தலில் நாங்கள் 51 வீதமான வாக்குகளை எடுத்து தரமான செய்தியை ஜனாதிபதிக்கு கூற முடியாது. ஜனாதிபதியுடைய கட்சியாக இருக்கட்டும் ஏனைய கட்சிகளாக இருக்கட்டும் அவர்கள் 51 வீத வாக்குகளை எடுத்து வென்றால் அவர்களுக்குப் போதும். ஏனென்றால் அவர்களுடைய தேவை தங்களுக்கு மக்கள் அங்கீகாரத்தை வழங்கி இருக்கின்றார்கள் என்கின்ற செய்தியினை கூறுவது மாத்திரம் தான்.

ஆனால் எங்களுக்கு எங்களுடைய வட்டாரங்களில் 80 வீதத்திற்கும் அதிகளவான வாக்குகளை பெற வேண்டிய தேவை இருக்கின்றது. அப்போதுதான் நாங்களும் நமது ஜனாதிபதியின் கட்சியிடம் கூறலாம், எங்களுடைய மக்கள் 80 வீதத்திற்கும் அதிகமான மக்கள் நமது கட்சிக்கு ஆணையை வழங்கி இருக்கின்றார்கள் என்று.

எதற்காக ஆணையை வழங்கி இருக்கின்றார்கள் என்றால், தமிழ் மக்களது அரசியல் எதிர்காலத்திற்காக ஒரு சமஷ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு ஒன்றை அரசமைப்பிலே மாற்றங்களை கொண்டு வருகின்ற போது நமது மக்கள் கோருகின்றார்கள் என்கின்ற செய்தியை கூறுவதற்கான ஒரு ஆணையை 80 வீதமான வாக்குகளை வழங்குவதன் மூலமாக தமிழ் மக்கள் வழங்கலாம்.

இதற்காகத்தான் நாங்கள் கிராமம் கிராமமாக சென்று, வடக்கு, கிழக்கு பூராகவும் சென்று, எங்களுடைய மக்களுக்கு முன்பாக சென்று, இந்தச் செய்தியைக் கூறி மக்களிடம் வாக்குகளை கேட்டு வருகின்றோம்.

நாங்கள் அபிவிருத்தியையும் செய்வோம், கடந்த காலத்தில் இங்கு இராஜாங்க அமைச்சர்கள் இருந்தபோதும் இந்தப் பகுதியில் அதிகளவான அபிவிருத்தியை செய்தது நான்தான்.

இவற்றை செய்வதற்கு எமக்கு எவ்வாறு வாய்ப்பு வருகிறது என்றால் எமது கட்சிக்கு கிராமங்கள் தோறும் கிளைகள் காணப்படுகின்றன. பிரதேசத்திற்கு கிளைகள் காணப்படுகின்றன. இன்று சில கட்சிகளைப் பார்த்தீர்கள் என்றால் கிளையும் இல்லை, அவர்களுக்கு நிரந்தரமான ஒரு அலுவலகமும் இல்லை. அவர்களது கட்சிக்கான தலைவரும் இல்லை. சிலருக்கு தலைவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் வெளியில் இல்லை. தலைவர்கள் இருக்கின்றார்கள். ஆனால் எங்களைப் போன்று சுதந்திரமாக வெளியில் சுற்றித்திரிய முடியாது.

ஊழல், மோசடிகளை ஒழிக்கப் போகின்றோம் என்று ஆட்சிக்கு வந்தவர் ஜனாதிபதி. நேற்றைய தினம் கொழும்பில் மேதினத்தினை பிரமாண்டமாக தேசிய மக்கள் சக்தி ஏற்பாடுசெய்திருந்தது. அனைவருக்கும் சிவப்பு ரீசேட்டுகள் வழங்கி பெருமளவான பணத்தினையும் செலவளித்திருந்தனர். கொழும்புக்கு 5.500 பஸ்களில் மக்களை கொண்டுவருவதற்கான அனுமதிகளை பொலிஸில் பெற்றிருக்கின்றார்கள். இவ்வளவு பஸ்களில் மக்களை கொண்டுவருவதானால் எவ்வளவு நிதி தேவைப்பட்டிருக்கும்?

இதற்கான பணம் அநுரகுமார திஸநாயக்கவின் வீட்டிலிருந்துவந்ததா, அல்லது பிரதமரின் வீட்டிலிருந்து வந்ததா? எங்கிருந்து இவ்வளவு நிதி வந்தது? இவர்கள் ஊழல்வாதிகள் இல்லை,மோசடி செய்யவில்லையென்றால் நான் பகிரங்க சவால் விடுக்கின்றேன். உங்கள் கட்சிக்கு நேற்றைய கூட்டத்தின் இவ்வாறான செலவுகளை எவ்வாறு செய்கின்றீர்கள் என்பதை வெளிப்படுத்துங்கள்.அவர்களினால் செய்யமுடியாது. அவர்களுக்கு வரும் நிதி தொடர்பில் நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்தவேண்டும். தெரியப்படுத்த முடியாவிட்டால் இவர்களும் ஊழல் வாதிகள்தான். – என்றார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

# ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மன்னார் இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டம்

**(மன்னார் நிருபர்)**

ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மன்னார் மாவட்டத்திற்கான இறுதி தேர்தல் பிரசார கூட்டம் நேற்றைய தினம் மாலை 6 மணியளவில் மன்னார் பெரியகமம் பகுதியில் இடம்பெற்றது.

மன்னார் நகர சபை முதன்மை வேட்பாளர் டானியல் வசந்தன் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், எஸ்.வினோ நோகராதலிங்கம், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர். குமரேஸ், ரெலோ கட்சியின் மத்திய குழு உறுப்பினர் லுஸ்ரின் மோகன் ராஜ், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மன்னார் நகர சபை வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.










உள்ளூராட்சி சபை
# தேர்தல் களம்

VOTE

# தேசியத் தலைவருக்கு சிலை வைக்கப் போவதாக ஜே.வி.பி. எங்களின் காதுகளில் பூச்சுற்றக் கூடாது

## யாழ்ப்பாணம் றக்கா வீதிக் கூட்டத்தில் சிவாஜிலிங்கம் சீற்றத்துடன் உரை

(பிரபாகரன் டிலக்சன்)



தமிழீழத் தேசியத் தலைவருக்கு நாங்கள் சிலைவைப்பதாக இருந்தால் இந்தியாவில் 100அடியில் எவ்வாறு திருவள்ளுவர் சிலை, பட்டேல் சிலை போன்றவை பிரம்மாண்டமாக நிறுவப்பட்டனவோ அது போல் அவருக்கு வல்வெட்டித்துறைக் கடலுக்கு நடுவிலே சிலையை நாங்கள் நிறுவோம். அது போல் வல்வெட்டித்துறைப் பிரதேச வைத்தியசாலையில் தேசியத் தலைவரின் பெற்றோரின் பெயரில் கதிரியக்க சிகிச்சை பிரிவு உருவாக்கப்படும். எனவே தேசியத் தலைவருக்கு சிலை வைக்கப்போவதாக ஜே.வி.பியினர் எங்கள் காதில் காதில் பூ சுற்றத் தேவையில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசிய பேரவையின் யாழ் மாவட்டத்திற்கான இறுதி பிரசாரக் கூட்டம் யாழ்ப்பாணம் றக்கா வீதியில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சித் தேர்தலில் பலவிதமான பொய்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மாநகர சபை, வல்வெட்டித்துறை நகர சபையையும் கைப்பற்றுவதற்காக ஜே.வி.பி அமைச்சர்கள் குழாம் யாழ் மாவட்டத்தில் நடமாடுகிறது.

தேசியத் தலைவருக்கு வெண்கல சிலை அமைக்கப்படும். வேலுப்பிள்ளை பார்வதியம்மா பெயரில் இறங்குதுறை அமைப்போம் என தேசிய மக்கள் சக்தி பாடல்களை வெளியிட்டுள்ளது. இதனை அமைச்சர் சந்திரசேகர் வெளிப்படையாக அறிப்பாரா என சவால் விட்டேன்.

இன்று(நேற்று) ஊடகவியலாளர்கள் தேசியத் தலைவருக்கான சிலை பற்றி அமைச்சர் சந்திரசேகரிடம் கேட்ட போது அவர் பூசிமெழுகிவிட்டார். இவர்களின் பொய்களை மக்கள் நம்பத் தயாராக இல்லை.

மாவீரர்களின் கனவுகளை நனவாக்குவோம் என சந்திரசேகர் தெரிவிக்கிறார். அவர்கள் கண்ட கனவு தமிழர்களின் தாகம் தமிழீழத் தாயகம் என்பதாகும். அதனை இவர்களால் கொடுக்க முடியுமா? தமிழர்களின் தாயகமான வடக்கு, கிழக்கை நீதிமன்றம் சென்று இரண்டாக பிளவுபடுத்தியவர்கள் இந்த ஜே.வி.பியினர். இவர்கள் எவ்வாறு மாவீரர் கனவை நனவாக்குவார்கள். எல்லாம் பொய்ப் பிரட்டுக்கள்.

தமிழீழ தேசியத் தலைவருக்கு சிலைவைப்பதாக இருந்தால் இந்தியாவில் 100அடியில் எவ்வாறு திருவள்ளுவர் சிலை, பட்டேல் சிலை பிரம்மாண்டமாக நிறுவப்பட்டதோ அது போல் தமிழீழத் தேசியத் தலைவருக்கு வல்வெட்டித்துறை கடலுக்கு நடுவிலே சிலையை நாங்கள் நிறுவோம். எனவே தேசியத் தலைவருக்கு சிலை வைக்கப் போவதாக ஜே.வி.பியினர் எங்கள் காதில் காதில் பூச்சுற்றத் தேவையில்லை.

அது போல் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையில் தேசியத் தலைவரின் பெற்றோரின் பெயரில் கதிரியக்க சிகிச்சை பிரிவு உருவாக்கப்படும். அது போல் மின் தகன மயானத்திற்கும் அவர்களின் பெயர் சூட்டப்படும்.

ஆயுதப் போராட்ட ஆரம்பகால தலைவர்களான தங்கதுரை, குட்டிமணிக்கு சிலை வைப்பதற்கான முயற்சி மேற்கொண்டு அனைத்து அனுமதிகளைப் பெற்றாலும் அதனை கடந்த கால ஆட்சியாளர்கள் தடுத்தார்கள். இந்த அரசாங்கத்திலும் அந்த தடை தொடர்கின்றது. அந்த இருவருவருடைய சிலைகளை அமைப்பதை எங்கள் ஆட்சி உறுதிப்படுத்தும்.

அது போல் தீருவிலில் 70 அடி உயரமான தூபி நிறுவப்படும். அரச படைகளை எதிர்த்து போரிட்ட மாவீரர்களுக்கும், கொல்லப்பட்ட அப்பாவி பொது மக்களுக்கும் நினைவுத் தூபி அமைக்கப்படும். மாவீரர்களின் கனவுகளை நனவாக்குவதை நோக்கி எங்கள் ஆட்சி நகரும்.

ஒற்றையாட்சிக்குள் தமிழர்களின் தீர்வை முடக்குவதை தடுப்பதற்காக கஜேந்திரகுமார் தலைமையில் ஒன்றிணைந்திருக்கின்றோம். அநுர – சுமந்திரன் கூட்டில் உருவாக்கப்படவுள்ள ஏக்கியராஜ்ஜியவை எதிர்ப்போம்.

ஜே.வி.பியினரை பார்த்து எங்களின் இளைய தலைமுறை ஏமாந்து விட்டது. ஜே.விபியின் கொலைப் பட்டியல் என்பது பெரிது. இப்போது பட்டலந்தவை விசாரிப்பவர்களுக்கு செம்மணிப் படுகொலை பற்றி தெரியவில்லையா? ஜே.வி.பியின் இனவாதச் செயற்பாட்டை நாங்கள் நன்றாக அறிந்தவர்கள். புலிகளுக்கு எதிரான கடுமையான நிலைப்பாட்டை கொண்டிருந்தவர்கள் அவர்கள். கடுமையான இனவாதம் பேசியவர்கள் இப்போது நல்லிணக்கம் பேசுகிறார்கள். இவர்கள் நல்லிணக்கம் பேசுவது இறைச்சிக் கடைக்காரன் ஐயர் வேசம் போடுவதைப் போன்றது.

தமிழீழ தேசியத் தலைவரின் மண்ணான வல்வெட்டித்துறை நகரசபையை பிடிப்போம் என்ற ஜே.வி.பியின் பகல் கனவு தகர்கனவு. அது 6ஆம் திகதி தகர்க்கப்படும். – என்றார்.

## உள்ளூராட்சி சபை தேர்தல் களம்

VOTE

# திருக்கோவிலில் சுயேச்சைக் குழுவினரின் இறுதி பிரசாரக் கூட்டத்தில் திரண்ட மக்கள்









( திருக்கோவிலிலிருந்து வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேச சபைக்கான தேர்தலில் போட்டியிடும் பிரபல சமூக செயற்பாட்டாளரும் தொழிலதிபருமான சுந்தரலிங்கம் சசிகுமார் தலைமையிலான சுயேச்சை குழுவின் இறுதி தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் பெரும் எண்ணிக்காயான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த இறுதி பிரசாரக் கூட்டம் திருக்கோவில் கிராமத்தில் நேற்று சனிக்கிழமை மாலை நடைபெற்றது.

தம்பட்டை தொடக்கம் உமிரி வரையிலான பொது மக்கள் வெள்ளத்தினால் கூட்டம் களைகட்டியது.

இதில் சுயேச்சை குழு வேட்பாளர்கள் தமது எதிர்காலத் திட்டங்கள் பற்றி ஆக்ரோஷமாக உரையாற்றினார்கள்.

இறுதியில் தலைமை வேட்பாளர் சுந்தரலிங்கம் சசிகுமார் உரையாற்றியபோது அவருக்கு பெரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

மக்கள்மலர்மாலைகளைஆளுயரரத்துக்கு அணிவித்து ஆதரவைத் தெரிவித்தனர்.






# தமிழரின் தாயகத்தை தமிழரே ஆள வேண்டும்

## ஈ.பி.டி.பியின் ஸ்ரீகாந்த் கூறுகிறார்

எமது மண்ணை நாங்களே ஆள வேண்டும் என்பதற்காக முன்னெடுக்கப்பட்ட தியாகங்கள் அர்த்தமற்றுப் போகக்கூடா என்று தெரிவித்துள்ள ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந்த் பன்னீர் செல்வம், தோல்விப் பயத்தில் சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் தெரிவித்தார்.

யாழ் ஊடக மையத்தில் நேற்றுத் தாம் நடாத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். மேலும் தெரிவித்தவை வருமாறு:–

“நேற்றைய தினம், ஊர்காவற்றுறை கரம்பன் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக வித்தியாசமான செய்திகள் வெளியாகி இருப்பதாலும், அவற்றை வைத்து சிலர் எமக்கு எதிரான பொய்யான அவதூறுகளை பரப்புவதும் அவதானிக்கப்படுவதால், உண்மையில் என்ன நடந்தது என்பது எமது மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

உண்மையிலேயே அந்தப் பகுதியில் எமது கட்சியின் ஆதரவாளர் ஒருவரின் வீட்டில் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் எமது செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டிருந்தார்.

அதன்போது, எமது கட்சியின் செயற்பாட்டாளர்களாக கடந்த காலங்களில் செயற்பட்ட இருவர், நிறை மதுபோதையில் கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு வருகை தந்தனர்.

அவர்கள் எமது செயலாளர் நாயகத்தினை நெருங்கிச் சென்று கதைப்பதற்கு முயற்சித்த போதிலும் அங்கிருந்தவர்களினால் அதற்கு அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில் கூட்டத்தினை நிறைவு செய்து கொண்டு செயலாளர் நாயகம் புறப்படத் தயாரானபோது, மதுபோதையில் இருந்தவர்களுள் ஒருவர், எமது வாகனம் செல்வதற்கான வீதியில் தடையை ஏற்படுத்தும் நோக்கில் வீதியால் சென்ற உழவு இயந்திரத்திற்கு குறுக்காக விழுந்து படுத்துக் கொண்டார். அதன்போது அவருக்கு காயம் ஏற்பட்டு இருக்கலாம் என்று கருதுகின்றோம்.

இந்நிலையில் அங்கிருந்தவர்களும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் இணைந்து அவரை அப்புறப்படுத்தி உழவு இயந்திரத்தினை அனுப்பி வைத்தமையைத் தொடர்ந்து, செயலாளர் நாயகத்தின் வாகனம் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.

அதன் பின்னர் மதுபோதையில் இருந்ந 2 ஆவது நபர், எமது கூட்டம் நடத்தப்பட்ட வீட்டிற்குச் சென்று அங்கிருந்த பெண்மணியுடன் தர்க்கத்தில் ஈடுபட்டிருக்கிறார்.

இதனால், ஆத்திரமடைந்த ஊரவர்கள் குறித்த நபர் மீது தாக்குகதல் மேற்கொணட நிலையில், பொலிஸார் தலையிட்டு குழப்பம் ஏற்படுத்தியவரை கைது செய்துள்ளனர். உழவு இயந்திரத்தின் குறுக்கே படுத்துஜ் காயம் ஏற்படுத்திக் கொண்டவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதுதான் உண்மை.

இதனை எமக்கு அவப் பெயரை ஏற்படுபடுத்தும் வகையில் திட்டமிடப்பட்ட சம்பவமாகவே பார்க்கின்றோம்.

எமது வெற்றி வாய்ப்பை தடுப்பதற்கு அனைத்துச் சூழ்ச்சிகளையும் அண்மைக்காலமாக முன்னெடுத்து வருகின்றவர்கள், ஊர்காற்றுறை பிரதேச சபையை ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி எளிதாகக் கைப்பற்றும் என்பதை உணர்ந்து கொண்டுள்ள நிலையில், வெற்றியை தடுப்பதற்கான முயற்சியாக இந்த சூழ்ச்சியை முன்னெடுத்த போதிலும், எமது தோழர்கள் மற்றும் ஆதரவாளர்களின் சகிப்புத் தன்மை, பொறுமை போன்றவற்றினால், இதனை திட்டமிட்டவர்கள் எதிர்பார்த்த விபரீதம் எதும் இடம்பெறாமல் தவிர்க்கப்பட்டு விட்டது.

தங்களுடைய பொய்களுாம் புரட்டுக்களையும் எமது மக்கள் புரிந்து விட்டமையினால், தங்களுடைய உளறல்களும் கோமாளித்தனங்களும் எமது மக்கள் எரிச்சலடைய தொடங்கி விட்டமையினால், நடைபெறவுள்ள உள்ளுராட்சி மன்றத் தேர்தலில் தமக்கு வெற்றி வாய்ப்பு அறவே இல்லாது போய் விட்டது என்பதை புரிந்து கொண்டவர்கள் எமக்கு எதிராக சூழ்ச்சிகளை மேற்கொண்டு மூக்கு உடைபட்டுப் போய் இருக்கின்றனர்.

இந்த நிலையில் எமது மக்கள் ஒன்றை மறந்து விடக்கூடாது. இந்த மண் எங்களின் மண். இதனை நாமே ஆள வேண்டும் என்பதற்காக அளப்பரிய தியாகங்கள் செய்யப்பட்டுள்ளன.

இற்றைக்கு 39 ஆண்டுகளுக்கு முன்னர் ஈழ விடுதலைப் போராட்டத்தில் களப்பலியான முதலாவது பெண் போராளியான ஷோபா இன்றைய நாளிலேயே தன்னுடை உயிரரை தியாகம் செய்திருந்தார்.

எந்த அமைப்பின் ஊடாக அந்த தியாகங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும் அவை மதிக்கப்பட வேண்டும். வீண் போகக்கூடாது என்பதை மனதில் வைத்து உள்ளூராட்சி சபை தேர்தலில் மக்கள் வாக்குகளை அளிக்க வேண்டும். – என்று தெரிவித்தார்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.05.2025




இன்றைய நாள் நீங்கள் விரும்பத் தக்கதாக இருக்கும். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று பயனுள்ள திட்டங்களை தீட்டுவீர்கள். அது உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.

உங்கள் பணியில் சாதகமான பலன்கள் கிடைக்கும். அதிகப்படியான பண வரவு ஊக்கத் தொகையாக கிடைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் அன்பை உங்கள் துணையிடம் வெளிப்படுத்து வீர்கள். உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று பணம் சம்பாதிப்பதற்கான வலுவான அடித் தளத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் உற்சாகமான மன ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் சுமூகமாகவும் வெற்றி கரமாகவும் அமைய நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். உங்கள் புத்தி சாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும். ஸ்ரீலட்சுமி நரசிம்மரை வணங்குவதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும்.

இன்று உங்களுக்கு வெளியிலிருந்து ஊக்கம் கிடைக் காது. உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் பணி களை குறித்த நேரத்துக்கும் முடிப்பீர்கள். எதிர்பாராத வகையில் வரும் பணிகளையும் முடிப்பீர்கள்.

உறவு என்று வரும் போது நீங்கள் அதனை லேசாக கையாள வேண்டும். அன்பும் புரிந்து கொள்ளுதலும் உறவைச் சிறப்பாக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். தேவையற்ற செலவுகளை எதிர்கொள்ள் நேரும்.




இன்றைய நாள் பயனுள்ளதாக இருக்காது. என்றாலும் வருத்தப்படுவதை குறைத்துக் கொண்டு, உங்களுக்கு விருப்பமான விஷயங்களுக்காக நேரத் தையும் திறமையையும் பயன்படுத் துங்கள். தியானப் பயிற்சி சிறந்தது. குழப்பங்களுக்கு இடம் கொடாமல் தெளிவாக எண்ண வேண்டும்.

உங்கள் நாளை திட்டமிட்டு பணியாற்றுங்கள். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது. உங்கள் அன்றாட பணிகளுடன் வேறு பணிகளையும் ஆற்று வீர்கள்.

உங்கள் உணர்சிகளை முறையாக கட்டுப்படுத்த வேண்டும். இதனால் உறவுப் பிணைப்பு பாதிக்கப்படும்.

இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை காணப்படாது. பணம் சம்பாதிக்கும் திறமையை வளர்த்துக் கொள் ளுங்கள். கண்டிப்பாக நல்லது நடக்கும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி உங்களுக்கு சாதகமாக அமையும் நாள். மிகவும் அற்புதமான நாள். உங்கள் முடி வெடுக்கும் திறமையில் முன்னேற்றம் காணப்படும். உங்களிடம் உறுதி காணப் படும்.

உங்கள் பணியைப் பொறுத்தவரை சிறப்பான நிலை யில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப்பெறுவீர்கள். உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கருத்துக்களை உங்கள் துணையுடன் இனிமை யான முறையில் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் பராமரிக்கப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு நிலை உயரும்.




எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று பொறுமை அவசியம். இன்று உங்கள் பொறுப்புகள் அதிகமாக காணப்படும்.

பணியிடத்தில் பரபரப்பு காணப்படும். திட்டமிட்டு முன்னுரிமைப்படி பணியாற் றினால் எல்லாப் பணிகளையும் எளிதாக முடிக்கலாம்.

ஒருவருக்கொருவர் பரஸ்பரம் அன்பை பரிமாறிக் கொள்வது, அதுவும் கஷ்ட நேரங்களில் பரிமாறிக் கொள்வது உறவில் மிகவும் அவசியம். அவர் விரும்பும் வகையில் நடந்து கொள்வது சிறந்தது.

சிறு கடன்கள் மூலம் உங்கள்அடிப்படை தேவை களை எளிதாக சமாளிக்கலாம். உங்களிடம் அதிக பணம் இல்லாவிட்டாலும் இருக்கும் பணத்தில் எப்படி வாழ வேண்டும் என்று அறிந்திருப்பீர்கள்.




ஆன்மீக சொற்பொழிவுகள் கேட்டல் மற்றும் அடிக்கடி கோவிலுக்கு செல்வது மனதுக்கு ஆறுதல் தரும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். தியா னம் மேற்கொள்வது சிறந்த பலனைத் தரும்.

செயல்களை திட்டமிட வேண்டும் மற்றும் அதன்படி முடிக்க வேண்டும். அப்பொழுதான் அவை உங்கள் கட்டுப் பாட்டில் இருக்கும், தேவையற்ற செயல்கள் செய்வதை தவிர்க்க முடியும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பதில் கவனம் செலுத்த வேண்டும். உறவு சம்பந்தமான விருப்பு வெறுப்புகளைப் பற்றி உங்கள் துணையிடம் பேசி தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் நல்ல புரிந் துணர்வும் உறவுப் பிணைப்பில் வலுவும் ஏற்படும்.




நீங்கள் அதிகப்படியாக செயலாற்றி னால் வெற்றியைக் காண நேரலாம். உங்களின் நகை மற்றும் விலை மதிப் புள்ள பொருள்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். எச்சரிக்கையாக இருப்பதன் மூலம் பாதகமான விளைவு களை தவிர்கலாம்.

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும். நீங்கள் சாதாரணமாக செய்வதை விட இன்று கூடுதலாக செயல் பட வேண்டும். என்றாலும் திட்டமிட்டு செய லாற்றினால் நீங்கள் நன்மை காணலாம். பணியின் தரத்தில் கவனம் தேவை. வேலை தொடர்பான பயணம் காணப்படும்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற் கொள்ளுங்கள்.




இன்று இனிமையான சாதகமான நாள். இன்று நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்றைய நாளை முறை யாகத் திட்டமிடவும். முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

நீங்கள் எந்தப் பணி செய்தாலும் அதில் இன்று வெற்றி காண்பீர்கள். உங்கள் பணி யைக் கண்டு உங்கள் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள்.

உங்கள் துணையுடன் பேசி அளவளாவுவீர்கள். இருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு நடந்து கொள்வீர்கள். ஒருவரின் கருத்துக்கு மற்றவர் மதிப்பு அளிப்பீர்கள்.

பணம் அபரிமிதமாக காணப்படும். அதனை உங்க ளின் நலனுக்கு பயன்படுத்துவீர்கள். பணத்தை சிறந்த முறையில் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.05.2025




இன்று உங்களுக்கு சிறப்பான நாள். உங்கள் அக்கம் பக்கத்தவரின் ஆதரவு கிடைக்கும். இன்று அனைத்தும் சிறப் பாக நடக்கும். இன்று நல்ல பலன்கள் கிடைக்கும்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். அவர்கள் உங்களை பாராட்டுவார்கள். உங்கள் கடின உழைப்பு மற்றும் திறமை வெளிச்சத் துக்கு வரும்.

உங்கள் துணையுடன் விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ள வேண்டிய நேரம். இதில் நீங்கள் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் துணையிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள்.

வெளி நாட்டிலிருந்து பணம் கிடைக்க வாய்ப்புள்ளது. உங்களுக்கு தேவைப் படும் பொழுது அந்தப் பணம் கிடைக்கும்.




இன்று சிறப்பான பலன்கள் கிடைக் காது. என்றாலும் அமைதியாக செயல்களை கையாண்டால் சரியாக செயலாற்றலாம். செயல்களை பொறு மையுடன் கையாளுங்கள்.

இன்று முன் கூட்டியே திட்டமிடலும் அதன்படி நடந்து கொள்வதும் கடினமாக இருக்கும். பணிகளை சரியான விதத்தில் கையாண்டால் சுமை குறைவாகத் தெரியும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இது மறக்க முடியாத நாளாக இருக்கும். இருவருக்கும் இடையே நல்ல பிணைப்பு ஏற்பட இருவரும் அனுசரித்து நடந்து கொள்வீர்கள். நல்ல வார்த்தைகளை பரிமாறிக் கொள் வதன் மூலம் இன்றைய நாளைச் சிறந்ததாக ஆக்கலாம்.

நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை விட அதிகம் பணம் இன்று உங்களுக்கு தேவையாக இருக்கும்.




இன்று இறை வழிபாட்டில் ஈடு படுங்கள். முக்கிய முடிவுகள் எடு-ப்பதை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப் போடுங்கள்.

பணியிடத்தில் திட்டமிட்டு வேலை செய்தால் பலன் கிடைக்கும். உங்களின் நேர்மறையான அணுகுமுறை காரணமாக அதிகப் பணிகளையும் எளிதாக கையாள்வீர்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது புரிந்துகொண்டு பொறுமையாக பேச வேண்டும். உங்கள் வார்தைகள் தவறாகப் புரிந்து கொள்ள வாய்ப்புளதால் கவன மாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் அன் பாகப் பழகுவதன் மூலம் நேர்மறையான விளைவுகள் காணலாம்.

நீங்கள் அதிகமாக செலவு செய்வீர்கள்.




நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படு வீர்கள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம். இன்று அதிர்ஷ்டம் உங்கள் பக்கம் இருக்கும். வெற்றியின் உச்சத் துக்குச் செல்வீர்கள்.

உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். உங்கள் முயற்சி பாராட்டைப் பெறும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணி சிறியதாக இருந்தாலும் அதனை மகிழ்வுடன் சிறந்த முறையில் செய்வீர்கள்.

இன்று உங்களுக்கும் உங்கள் துணைக்கும் மிகவும் இனிமையான மகிழ்ச்சியான நாள். இருவரும் ஒரு வரோடொருவர் நேரம் ஒதுக்கி கலந்து பேசலாம். அதே சமயத்தில் அமைதியைக் கையாள வேண்டும்.

இன்று கணிசமான பணம் சேமிப்பீர்கள். பங்கு வர்த்த கத்தின் மூலம் நல்ல பலன் கிடைக்கும்.




# கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று விசேட சோதனை நடவடிக்கை

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நேற்று விசேட தேடுதல் மேற்கொள்ளப் பட்டது.

காஷ்மீர் பயங்கரவாதத் தாக்கு தலுடன் தொடர்புடைய 06 பேர் இந் தியாவின் சென்னையிலிருந்து விமா னம் மூலம் இலங்கைக்கு வந்துள்ளனர் என கிடைத்த தகலுக்கமைய இந்தத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்திக மன துங்க தெரிவித்துள்ளார்.

நேற்று முற்பகல் 11.59 அளவில் இந்தியாவின் சென்னை விமான நிலை யத்திலிருந்து யூ.எல் 122 விமானத்தில் பயணித்த பயணிகளுடன் இந்தியாவின் காஷ்மீர் பகுதியில் நடத்தப்பட்ட பயங் கரவாதத் தாக்குதலுடன் தொடர்பு டைய சிலர் நாட்டுக்கு வந்துள்ளனர் என தகவல் கிடைத்துள்ளது.

இந்தியாவின் சென்னையிலி ருந்து அந்த தகவல் கிடைத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அந்த தகவல்கள் கிடைத்த பின் னர் பொலிஸார், விமானப் படையி-னர் மற்றும் விமான நிலைய பாதுகா-ப்பு பிரிவினர் இணைந்து விமானம் மற்றும் அதில் வந்த பயணிகளை சோத னைக்கு உட்படுத்தினர்.

எனினும், இதன்போது சந்தேகத் திற்கிடமான எவரும் அல்லது சந் தேகத்திற்கிடமான பொருள்கள் எவையும் கண்டறியப்படவில்லை.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வந்த அந்த விமா னத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கைகளின் காரண மாக அந்த விமானம் சிங்கப்பூர் நோக்கி பயணிப்பதில் தாமதமேற்பட்டதாக ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவ னம் அறிவித்துள்ளது.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வ தேச விமான நிலையத்தின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.